திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 14—12—47 | இதழ் 28

இந்தியா ஒரேநாடா?

—※—

"சிலர் இந்தியா என்ற ஒற்றுமைபட்ட ஒரு நாட்டைத் துண்டு போடுவது சரியா என்று கேட்கின்றனர். ஒன்றுபட்ட ஒருநாட்டைப் பிரிப்பது தவறுதான். அதிலும் இப்போது ஐரோப்பாவில் பல நாடுகள் ஒன்றுகூடி வேலைசெய்யும் காலம். ஆனால் இந்தியா என்ற ஒன்றுபட்ட நாட்டைப் பிரிப்பது சரியா என்று கேட்கிறார்களே, அந்தக் கேள்வியில் உள்ள வாசகம் சரியா என நான் கேட்கிறேன். இந்தியா ஒன்றுபட்ட நாடா? எந்தக்காலத்திலாவது அரசியல் துறையில் இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருந்ததுண்டா?

சமஸ்கிருத புராணங்களில் 56-தேசத்து மன்னர்கள் இருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அசோகர் இந்தியாவை ஏகதேசமாக ஒன்றுபடுத்தி ஆளநினைத்தார். ஆனால், அவரால் தண்டகாருண்யம் வரையில் தான் வரமுடிந்தது. அசோகரும் இதில் தோல்வி அடைந்தார். அசோகராஜ்யத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. சேர, சோழ, பாண்டிய, சசிபுத்திரர் என நான்கு தனி ஆட்சிகள் இருந்தன என்றே அசோகர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அக்பரும் இந்தியாவை ஒரு நாடாக்கி ஆளப்பார்த்தார். ஆனால் அக்பர்காலத்தில்கூட தமிழ்நாட்டை ஆளமுடியவில்லை. அக்பர் ஆட்சியின்போது ஒன்றுபட்டிருந்த வடநாடுகள்கூட தனித்தனியே பிரிந்து போயின.

ஆங்கிலேய ஆட்சியின் போதுதான் இந்தியா ஒரேநாடு என்ற கருத்து வந்தது, அதிலும் 75, 80-வருடமாகத்தான் இந்தியா ஒரு நாடு, தாய்நாடு எனும் கருத்து வந்தது."

7—4—40 சர். ஷண்முகம் (இன்றைய நிதிமந்திரி)

உருவான பலன்?

“கட்டுப்பாடு நீங்கவேண்டும். கட்டுப்பாட்டினால் கள்ளமார்க்கெட் பிறந்து கொழுக்கிறது. பலச் சோம்பேறிகள் இதனையே பிழைப்பாகக் கொண்டிருக்கிறார்கள். இதன் பலனாக உற்பத்திப் பெருக்கத்திற்குந் தடை ஏற்படுகிறது. அதிகாரத்திலுள்ள மந்திரிகள் மட்டுந்தான் அறிவிற் சிறந்தவர்கள் என்று கொள்ளக் கூடாது. அதிகாரத்திலில்லாத பல அறிஞர்களும் நாட்டிலுள்ளனர். அவர்கள் அறிவுரையைப் புறக்கணித்தல் கூடாது. நமது வியாபாரிகளையும், தொழில் அரசர்களையும் நம்புவது கூடாதா?”

“விலையை உயர்த்தாதீர்கள். மக்கள் தேவையைப் பணமாக்காதீர்கள். உற்பத்திச் செலவு அதிகமானாலன்றி விலையைக் கூட்டாதீர்கள். மக்களின் தர்மகர்த்தர்களாக நடந்து கொள்ளுங்கள்.”

“சிலர் இறந்தால்கூட பாதகமில்லை. போர்க்காலத்தில் சில சுதந்திரம் தடுக்கப்படலாம். போர் நீங்கினபின் அதே முறையைப் பிடித்துக்கொண்டிருப்பது நமது கலாசாரத்துக்குப் புறம்பானது. எனவே, சகல கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட்டு, மக்களுக்குப் பட்டினி கிடக்கவும், தியாகம் செய்யவும் உரிமையளிக்க வேண்டும்.”

மேற் குறித்தப் போக்கிலே காந்தியார், சில நாட்களாக விடாமல் பேசி வருகிறார். நமது தினத்தாள்கள், இதை விஷயமாக சொந்தத்தில் எதிர்த்துக் கொண்டிருந்த போதிலும், இதனை ஒரு எழுத்தும் விடாமல் பிரசுரித்து வருகின்றன.

தேவையான அளவிற்குப் பொருள் கிடைக்காத காரணத்தால், கிடைக்கும் பொருளும் திருப்திகரமானதாக இல்லாததால், ஏழை எளிய மக்களும் கட்டுப்பாடு ஒழிவதில் ஆவல் காட்டுகிறார்கள். அவர்களுக்குக் கட்டுப்பாடு நீங்கினால், சகல பொருள்களும் மலிவாகவும், நினைத்த மாதிரியும் ஏராளமாகவும் கிடைக்கும் என்னும் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள்.

உற்பத்திப் பெருக்கினால் பொருள் விலையும் [illegible] பேசப்படுகி[illegible] [illegible] உற்பத்தி பெருகுவதற்கு, தங்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு நெருக்கடி இருந்தபோதிலும் சகித்துக்கொண்டு, முதலாளிகளோடு ஒத்துழைக்க வேண்டுமென, தொழிலாளர்களுக்கு உபதேசம் செய்யப்படுகிறது. பொருள் உற்பத்திக்கு முதலாளிகள் தயாராக இருப்பதாகவும், தொழிலாளர்கள் தான் கூலிஉயரவேண்டுமெனும் சாத்தியமற்ற கோரிக்கையைக் கிளப்பி, வேலை நிறுத்தம் போன்ற தவறான போக்கில் சென்று, உற்பத்தியைத் தடுத்துவிடுவதாகத் தொழிலாளர்கள்மீது பழிச்சுமத்தி, தொழிலாளர்பால் பொதுமக்கள் சீற்றங்கொள்ளும் முறையில், ஒழுங்காகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

“தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டதால், பொருட்களின் விலையை உயர்த்த வேண்டியதாக இருக்கிறது. அதனால் பொதுமக்கள் கூடுதலான விலைகொடுத்து வாங்கி பணம் நஷ்டம் அடைய ஏதுவாகிறது; வாழ்க்கைச் செலவும் அதிகமாகிறது. அதிகமாக வாழ்க்கைச்செலவிற்கேற்ப மேலும் மேலும் தொழிலாளர் கூலிஉயர்வு கேட்பர். இது ஆபத்தைத் தரக்கூடியது. எனவே; துவக்கத்திலேயே தொழிலாளர் கோரிக்கைக்கு இணங்கக்கூடாது.”

இவ்வாறு பேசியும், பொதுமக்களுக்குத் தொழிலாளர்பால் ஆத்திரம் மூட்டப்படுகிறது. பெரும்பாலான பத்திரிகைகள் முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருப்பதால், லாபம் பெறுவதே முழுநோக்கமாகக் கொண்ட முதலாளிகளைப் பற்றியும், அவர்களுக்குள்ள லாப ஆசையால் எவ்வளவுதூரம் உற்பத்தி பாதிக்கப்படுகிறதென்பது பற்றியும் எழுதப்படுவதில்லை.

சென்ற போரின் விளைவாக முதலாளிகள் பெற்ற இலாபம் எவ்வளவு—அதே நேரத்தில் தொழிலாளர்கள் பெற்ற மொத்தக்கூலி எவ்வளவு—வாழ்க்கைச் செலவு எந்த அளவிற்கு உயர்ந்திருந்தது, இருக்கிறது—என்பதை எல்லாம் கணக்கிட்டுப்பார்த்தால் உண்மை விளங்கும். வாழ்க்கைச்செலவு அதிகரித்துப்போன காரணத்தால், அதற்குச் சரியாகத் தொழிலாளர்களின் கூலி உயராததால், இன்று தொழிலாளர் கையில் ஒரு சல்லிக்காசு மிச்சம் இருக்க நியாயமில்லை. ஆனால் அதே நேரத்தில் முதலாளிகள், போர்க்காலத்தில் வாழ்க்கைச்செலவு எவ்வளவு உயர்ந்திருந்தபோதிலும், தாராளமாகச் செலவு செய்து சுகமாகக் காலங்கழித்ததோடு மட்டுமல்லாமல், எல்லாத் தொழிலிலும் போட்ட முதலுக்கு மேல் பத்து இருபது மடங்குக்குக் கொள்ளை அடித்தனர். இன்று அவர்களிடம் பணம் பாசி பிடித்துப்போய் இருக்கிறது. அப்பணத்திற்கு மட்டும் வாயிருந்தால், அது அவர்களிடம் வந்தடைந்த வரலாற்றை எடுத்துக்கூறும். வஞ்சம் — பொய் — களவு —சூது—கொலை முதலிய அனைத்தையும் உள்ளடக்கியுள்ள பல திடுக்கிடும் கதைகள் நிரம்பி இருக்கக் காணலாம்.

யுத்த காலத்தில் குவிந்த அளவிற்கே இன்றும் லாபம் குவியவேண்டும் எனும் நோக்கத்தின் காரணமாகத்தான், தொழிலாளர்கள் அடிப்படைச் சம்பளம் கேட்பதாலேயே உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை என்றும், தொழிலாளர்கள் விருப்பத்திற்கு இணங்குவதனால் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க மக்கள்சம்மதிக்க வேண்டுமென்றும் பேசி, தங்களுக்குள்ள பேராசையை தொழிலாளர்கள் மீது சுமத்தி விடுகின்றனர்.

முதலாளித்துவ முறையால் உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டுவிடாது. பொருள் குறைவாக இருந்தால்தான் கிராக்கியான விலைக்கு அப்பொருட்களை விற்க முடியும். நல்ல லாபமும் கிடைக்க வழி பிறக்கும். இன்று அமெரிக்காவில், முதலாளிகள் கூற்றுப்படி, பலத் துறைகளிலும் உற்பத்தி பெருகித்தான் இருக்கிறது. இருந்தாலும் அங்கு பொருள்களின் விலை மலிவாக இருக்கவில்லை. வாழ்க்கைச் செலவும் கூடுதலாகத்தான் இருக்கிறது. யுத்தம் முடிந்ததும் கண்ட்ரோலும் நீக்கப்பட்டது. உற்பத்திப் பெருகி இருந்தும், கண்ட்ரோல் நீக்கப்பட்டும், அமெரிக்காவில் பொருட்களின் விலை குறைவடையாததற்குக் காரணம் என்ன? முதலாளிகளின் பேராசையும், முதலாளித்துவ முறையில் உள்ள முரண்பாடுமே, அங்கு மக்கள்படும் திண்டாட்டத்திற்குக் காரணம். உற்பத்தி முறையை மாற்ற வேண்டுவதுதான் நெருக்கடியைத் தீர்க்கும் மருந்து. வேண்டிய அள

(6-ம் பக்கம் பார்க்க)

★ பசித்த நாட்டில் பணவேட்டை! ★

—●—

பூர்வ பெருமை மிகுதியும் உள்ள நாடானபோதிலும், பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருப்பதினால், அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் எந்தவகையிலும் உயர்ந்துவிடாது. மக்களின் வாழ்வு வளமாக வேண்டுமானால் புதுப் புதுத் தொழில்கள் காணவேண்டும். புதுத் தொழில் துவங்குவதும் மக்களுக்கு நலம் செய்யும் முறையில் ஏற்படுத்தப்பட வேண்டுமேயன்றி, சிலருக்கு லாபம் தேடித்தரும் முறையில் அமைத்தல் கூடாது. தனி நபர் லாபம் கருதி செய்யப்படும் தொழிலுக்கு ஏற்றம் உண்டாகும் நிலையில் இன்று உலகம் இல்லை. ஒவ்வொரு நாடும், தன் தன் நாட்டின் செல்வத்தைப் பெருக்கவேண்டுமெனும் நோக்கம் கொண்டிருக்கிறது. எனவே உற்பத்திப் பெருக்குவதில் முன்னாள் முறை—ஆரம்பப்போக்கு—இனியும் பயனளிக்கும் என்று நம்புவதற்கில்லை. மக்களுக்குச் சிறப்பாக வேண்டப்படும் முக்கிய பொருட்கள் அனைத்தும், மக்கள் அனைவருக்கும் பேதாபேதம் காட்டப்படாமல் பயனளிக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தோடு, உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டம் தீட்டப்படுவதின் மூலந்தான், செல்வத்தை முன்னிலும் பன்மடங்கு அதிகமாகப் பெருக்கமுடியும். இன்று உலகம் உள்ள நிலையில் இந்த ஒரே முறைதான் சாத்தியப்படக் கூடியது. இம்முறையைத் தனி நபர்கள் ஏற்றுக் கடனாற்றுவர் என்று சொல்ல முடியாது. சொந்த லாபமே அவர்கள் குறிக்கோளாக இருக்கிறதால், அதிகப்படியான உற்பத்தியை பெருக்குவதின் மூலம், அவ்வாறு உற்பத்தியாகும் பொருட்கள் வாங்குவாரற்று, விலை மலிந்து, லாபத்திற்கு பதில் நஷ்டமடைவதற்கு அவர்கள் ஒருகாலும் சம்மதியார். எனவே தனிநபர் தொழில் திட்டம், இன்றைய நிலையில் கைவிடப்படவேண்டிய ஒன்றாகும். இதற்கு பதில் சமுகத்தின் தேவைக்கென—அத்யாவசியமான பொருட்களைப் பெருக்கும் முறையை, அரசாங்கமே தனது ...ங்காக் கடமையாகக் கொண்டு பணி புரிய முற்படவேண்டும். மக்கள் ஆட்சிமுறை இதுதான். இப்பயன்தரும் முறையைப் புறக்கணித்து எந்த ஆட்சியாளர் நடப்பினும், அவர்கள் மக்கள் ஆட்சிவழி நிற்பவர் என்று கொள்ளுதல் கூடாது—முடியாது—பொருந்தாது.

பயன்தராது என்று கண்டபின்னரும், லாபத்தையே லட்சியமாகக் கொண்டு தொழில்புரிந்து ருசிகண்டவர்கள்—லாபமே அத்தகையவர்களுக்கு ஊக்கமளிக்கும் வித்தாக இருக்கும் காரணத்தால்—அவர்கள் முன்முறையைக் கைவிடத் துணிவு கொள்ளார். எனவே பயனிழந்த ஒன்றை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பது, பிணத்திற்கு அலங்காரஞ்செய்து அழகு பார்ப்பதற்கேயொப்பாகும். அழுகிப்போனப் பிணம் பலநோய்களை உண்டாக்கும் தகுதியைப் பெறுவது போல், காலத்தோடு கைவிடப்படவேண்டிய முதலாளித்துவமுறையையும், கைவிடப்படாத காரணத்தால், மக்களுக்குத் தீங்கு பலதரும் பண்பைப் பெற்று விடுகிறது. பிணக்கும்—போரும்—அழிவும் அதுதரும் பரிசு. இதுவே வரலாறு கூறும் மறுக்கமுடியாத உண்மை. இன்று ஆட்சிபீடத்திலுள்ளோர், இதனைமதித்து நடப்பதாகக் காணோம். முதலாளித்துவத்திற்கு ஆக்கந்தேடும் முறையிலேயே திட்டமிடுகிறார்கள். மக்கள் விழிப்படைவதின் மூலந்தான், ஆளுவோரின் இந்த ஆபத்தான போக்கை மாற்றித் தங்களுக்குச் சாதகமான முறையில் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். தலைவர்கள்மீது கொண்டுள்ள நம்பிக்கையோடு, தங்கள்கடமை தீர்ந்துவிட்டதாக மக்கள் கொள்ளுதல் கூடாது. இந்தக்கவலையற்ற போக்கு ஆபத்தையே முடிவில் உண்டாக்கும். ஆட்சிபீடத்திலமர்ந்திருப்போர் எத்தகைய உரிமை வேட்கை கொண்டவர்களாக இருந்தபோதிலும், அது ஒன்று மட்டும் போதாது நல்லாட்சி அமைப்பதற்கு. எந்த ஆட்சியிலும், அதிகாரத்திலிருப்போர் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையை மக்கள் எச்சரிக்கையாகக் கண்காணித்து வருதல்வேண்டும். இதுவே மக்கள் ஆட்சிமுறையாகும். பூஜா மனோபாவம் மக்கள் உள்ளத்தில் பூரணமாக இடம்பெற்று, தேவை இன்னதென்பதையே உணராது, உணர்ந்தாலும் வழிவகைதெரியாது, தேவையைத் தியாகம் செய்வதே சிறப்புடையது எனும் மயக்கம் மேலோங்கி, செயலற்றிருப்பதே சுகம் எனும் சூழலில் சிக்கிக்கிடக்கும் மக்களிடம் மக்களாட்சி மலருவது மிக மிகக் கடினம்.

புதுத்தொழில் ஆரம்பிப்பதிலும், மக்கள் வாழ்விற்கு இன்றியமையாதது எவை எவையென ஆராய்ந்து, அவைகளை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்வதே ஒரு நல்லாட்சியின் முதற்கடமையாகும். நாட்டுமக்களுக்கு நலம் செய்யும் நோக்கங் கொண்டிருக்கும் ஓர் அரசு மேற்கொள்ள வேண்டியதிட்டமும் இதுதான். இதனை மதித்து நடப்பதாகக்காணோம், இந்திய யூனியன் அரசு.

பொதுவாக மக்களுக்கு வேண்டப்படுவது உணவு, உடை குடியிருப்பு வசதி. இந்த மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு பயங்கரமான முறையில் கூடிவருகிறது. இதன் அளவிற்கு உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. ஏற்கனவே உற்பத்தி செய்யப்படும் போக்கும், ஆரம்ப கால சாதனத்தைக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தின் துணை கொண்டு, தரிசாகக் கிடக்கும் நிலங்களை நல்லச்சாகுபடி நிலங்களாக மாற்றவும், மக்கள் அனைவரும் வயிறார உண்ண ஏற்பாடு செய்ய வேண்டியதும், அதற்கான திட்டத்தைத் தீட்டவும், தீட்டியதைத் தாளில் கண்டு களிக்காமல், உடனடியாக நிறைவேற்றவும், அதற்கானப் பொருள் உதவி செய்வதும் முக்கிய வேலைத் திட்டமாக இருக்க வேண்டும். இம்முறையால்உணவுப் பெருக்கம் அடைவதற்குள் மக்கள் பஞ்சத்தால் மடியாமல் இருக்க, வெளிநாட்டிலிருந்து வேண்டிய உணவுப் பொருட்களை, எந்த விலை கொடுத்தேனும் இறக்குமதி செய்தாகவேண்டும். இதற்கு இந்திய சர்க்கார் பின்னடைகிறது. நாம் யுத்த காலத்தில் இங்கிலாந்தில் சேர்த்து வைத்துள்ள ஸ்டர்லிங் நிதி, இந்த உணவுப் பொருள் இறக்குமதியால் குறைந்துவிடுகிறது எனச்சொல்கிறது. ஆனால்

அந்த ஸ்டர்லிங் நிதியை எதற்குப் பயன் படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கும்பொழுது எவர்க்கும் வேதனை அதிகரிக்கும்.

மக்கள் உணவிற்குத் திண்டாடி தெருவில் நின்று தவிக்கும்பொழுது சீமான்கள் சுகத்திற்கும், முதலாளிகள் வருவாய்க்கும் வழிசெய்வதற்கு இந்திய சர்க்கார் திட்டம் தீட்டுகிறது. இங்கிலாந்து தரவேண்டிய கடன் தொகையை, சிலரின் சுகபோகத்திற்கும் இலாபவேட்டைக்கும் பயன்படுத்தும் பணியில் முனைந்திருக்கிறது. இந்நாட்டு முதலாளிகள் மட்டும் இந்தச் சலுகையைப்பெறுவதாகக் கருதிவிடவேண்டாம். அமெரிக்க-ஆங்கில முதலாளிகள் இங்குள்ள முதலாளிகளோடு கூட்டுத்தொழில் நடத்தி, பணவேட்டை ஆட திட்டமிட்டிருக்கிறார்கள். அதாவது, இன்று பம்பாயில் பிரிமீயர் ஆட்டோ மோபைல்ஸ் எனும் பெரியமோட்டார் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டு, தொழில நடந்து வருகிறது. இந்தத் தொழில் ஸ்தாபனத்தில், அமெரிக்காவிலுள்ள கிரிஸ்லர் கார்ப்போரேஷன் எனும் மோட்டார் கம்பெனி கூட்டுறவு கொண்டுள்ளது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பலபகுதிகளையும், இங்கு ஒன்றுக்கப்பட்டு கிரிஸ்லர் மோட்டார்காரை உருவாக்கும் பணியில்தான் இந்த ஸ்தாபனம் இதுவரையில் ஈடுபட்டிருந்தது. இனி இந்த ஸ்பானத்திலேயே சகல மோட்டார் சாமான்களும் செய்யப்பட்டு மோட்டார் உருவாக்கும் பணியும் நடைபெறப் போகிறது.

இதுபோலவே கல்கத்தாவில் உள்ள ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட் எனும் ஸ்தாபனத்துடன், அமெரிக்க ஸ்டுடிபேக்கர் கம்பெனியும்-இங்கிலாந்து நப்பீல்டு கம்பெனியும் கூட்டாகத் தொழில் நடத்துகிறது. இந்த கம்பெனிக்கும் வெளியில் இருந்துவரும் மோட்டார் சாமான்களை ஒன்றாக இணைக்கும் வேலைதான். இங்கும் முழுமோட்டார் செய்யும் முறைமேற்கொள்ளப் படஇருக்கிறது.

குஜிராத்தில் ஒரு மோட்டார் தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது. கேய்சர்-பிரேசர் கார்ப்பரேஷன் எனும் ஜெர்மன் கம்பெனியின் கூட்டுறவு கொண்டிருக்கிறது. மேற் குறித்த மூன்று கம்பெனியும் 1950-க்குள் புதிய கார்கள் உற்பத்திச் செய்துவிடும். மேலும், ஐக்ய மாகாணத்திலும், சென்னையிலும் இதுபோன்ற இரு தொழிற்சாலைகளை இனிமேல்தான் நிறுவுவதற்கு இந்தியசர்க்கார் ஏற்பாடு செய்ய இருக்கிறதாம். இத்தொழிலில் கூட தென்னாட்டை வெறும் சந்தையாக-வடநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மார்க்கெட்டாக-உபயோகப் படுத்துவதில்தான் இந்திய சர்க்காரின் கருத்து இருக்கிறது. நிற்க,

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மோட்டார்கார்களுக்கு மறைவில் நிற்பவர்கள் டாடாவும் பிர்லாவும் ஆகும். லாபத்தில் பெரும் பகுதி அவர்களுக்கு. சிறு அளவு வெளிநாட்டு முதலாளிகளுக்கு. இது ஒரு புறமிருக்க, மோட்டார் அனைவராலும் வாங்கி அனுபவிக்கக் கூடியதல்ல. வாழ்க்கையின் உச்சத்தில் வீற்றிருப்பவர்களால்தான் ● இவைகளை வாங்க முடியும். எனவே இந்த உள்நாட்டில் இருக்கும் மார்க்கெட் மிக மிகச் சிறியதாகும். ஆனதால் வெளிநாட்டில் விற்பனை செய்ய முற்படவேண்டும். அங்கு போட்டி இருந்தாலும் இல்லாமற்போனாலும், இந்திய சர்க்காரின் மதிப்பை உயர்த்தவும், பலத்தைப் பெருக்கவும் இராணுவத்திற்கு மோட்டார்கள் தேவைப்படும். அது சமயம் இத்தொழிலுக்கு மார்க்கெட் விரிவடையும். சர்க்காரே கொள் முதல் செய்வதால் முதலாளிகளுக்கு நஷ்டமேற்பட வழி இருக்காது. பொதுமக்கள் செலுத்தும் வரிப் பணம் இரண்டொரு முதலாளிகளின் இரும்புப் பெட்டியில் தஞ்சம் புகும். இதனால் பெருவாரியான ஏழை மக்களுக்கு, வாழ்க்கைத்தரம் கடுகளவும் உயரப்போவதில்லை.

இங்கு வேலையற்றோர் தொகை ஏராளம். குறைந்த கூலிக்கு ஆயிரக்கணக்கில் ஆட்கள் கிடைப்பர். அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ தொழிலாளர்கள், இங்குள்ளவர்களுக்குத் தரப்படும் கூலி அளவிற்கு பெற சம்மதியார்கள். அவ்விடங்களைக் காட்டிலும் இங்கு உற்பத்திச் செலவு குறையும். குறைந்த செலவில் உற்பத்திச் செய்து ஏராளமான லாபம் பெறலாம் எனும் நம்பிக்கையில்தான் வெளி நாட்டு முதலாளிகள் இங்குள்ள முதலாளிகளோடு கூட்டுத் தொழில் நடத்த முனைந்துள்ளார்கள். இதற்குச் சரி செய்யப்படுகிறது, நமக்கு இங்கிலாந்து தரும் கடன் தொகை. மக்கள் உயிர் வாழ்வதற்கு செலவு செய்வது கூடாதாம்! முதலாளிகள் சுரண்டலுக்கு செலவிடுவது அவசியமாம்!

இந்திய அரசாங்கமே இதனை ஏன் ஏற்று நடத்துதல் கூடாது? சர்க்காருக்கு இன்றியமையாததும், அதிகப்படியான மக்களுக்கு அவசியமற்றதுமான இத்தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்துவதே நேர்மையானதாகும். இத்தொழிலே, இன்று அவசியமற்றது. பஞ்சம் மிகுந்த நாட்டில் முதலாளிகள் பணவேட்டைக்கு ஏற்பாடு செய்வது விரும்பக்கூடியதாகாது.

✲

விண்ணில் மணமும்—விருந்தும்

——

அலங்கரிக்கப்பட்ட விமானத்தில், நாலாயிரம் அடி உயரத்தில் சீன தம்பதிகளுக்குத் திருமணம் நடந்திருகிறது. பரம்பரைப் பழக்கம் கைவிடப்பட்டது. சீனாவில், இம்முறையில் நடந்த முதல் திருமணம் இதுவே.

இருபது விருந்தினருக்கு விருந்தளிக்கப்பட்டது.

——

'புது வாழ்வு'

(மாத வெளியீடு)

——

ஆசிரியர்:- க. அன்பழகன் எம்.ஏ.

முதல் இதழ் 14—1—48 பொங்கலன்று

கட்டண விவரம்:—

	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ் விலை அணா	4	,, 5
ஆண்டுக்கட்டணம் ரூபா	3	,, 4

விற்பனையாளர் தேவை. முன் பணம் கட்டக்கூடியவர்கள் உடனே எழுதுக.

விவரங்கட்கு:—

நிர்வாகி, புதுவாழ்வு நிலையம்,
10, வேளாளர் தெரு, புரசைபாக்கம்
சென்னை.

கேள்வியும் :: :: பதிலும்

1. திராவிடச் சமதர்மக் குடி அரசு கேட்கும் நீங்கள், பணமுட்டைகளைக் கட்சிக்கு வந்து பணியாற்ற அழைப்பது சரியா?

சரியல்ல. ஆகவேதான், பணம் படைத்தவர்களுக்கு, எது பிடித்தமானதோ, அந்த பட்டம் பதவி தேர்தல்ஆகியவற்றை சேலம் மாநாட்டிலே நீக்கினோம். அவ்வப்போது, இதழ்களில், அவர்கள்வந்து தொண்டாற்றக் கூடாதா என்று எழுதுவது அவர்கள் தற்போது மேற்கொண்டுள்ள அலுவல் நாட்டுக்கு நன்மை பயப்பதல்லவென்பதை விளக்குவதற்கே யன்றி, அவர்களை வரவேற்க அல்ல.

2. திராவிடநாட்டின் சுற்றளவு எத்தனை மைல்? எல்லைகள் எவை?

அவ்வளவு திட்டவட்டமாக, நமது கழகம், இதனை இன்னும் குறிக்கவில்லை. தனிநாடாக அமைவது என்ற பொது மூலக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதும், இந்த வேலையைச் செய்துவிடலாம் என்ற எண்ணம். திராவிடநாடு என்று இப்போதைக்கு, நாம் குறிப்பிடுவது, சென்னை மாகாணத்தை. ஆகவே இப்போதுள்ள நிர்வாக நிலையில், எந்தப் பிரதேசம், சென்னை மாகாணம் என்று குறிக்கப்பட்டிருக்கிறதோ, அதுவே திராவிடம்.

3. திராவிடநாடு பிரச்னையைத் தமிழ் நாட்டில் மட்டுமே பேசிப் பயன் என்ன? ஆந்திர, கேரளப் பகுதிகளில் செல்லவில்லையே?

பழங்கேள்வி-எனினும் பயனற்றதல்ல. திராவிடநாடு பிரிவினை விஷயம், அங்கெல்லாம் விளக்கப்படத்தான்வேண்டும். ஆனால் அதற்குத்தற்போது வசதி இருப்பதாகத் தெரியவில்லை. ஆந்திரரின்நாட்டமெல்லாம், தங்கட்கு ஓர் தனிமாகாணம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதிலே பதிந்திருக்கிறது—கேரளரும், அங்ஙனமே, ஐக்யகேரளத் திட்டத்தில் நாட்டம் கொண்டுள்ளனர். எனவே, இப்போது, அந்தப் பகுதி மக்களிடம், திராவிடநாடு பிரச்னை பற்றிப் பேசினால், செவியில் ஏறுமா என்பது சந்தேகந்தான். ஆனால், அதற்காக, திட்டம் தவறு என்று தள்ளிவிடவோ, பலிக்காது என்று விட்டுவிடவோ தேவையில்லை. அந்தப் பகுதிகளில் உள்ள, தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, அவர்களின் தனி மாகாண அமைப்புத் திட்டங்களை நாம் ஆதரிக்கிறோம் என்று வாக்குறுதி தந்து, திராவிட நாட்டுக் கூட்டாட்சித் திட்டத்துக்கு அவர்களின் ஆதரவைக் கோரிப் பெற வேண்டும்— முடியும் — தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசினால்.

4. கட்சியிலிருந்து, நான் ஒதுங்கி நிற்கிறேன், கட்சியின் முற்போக்குக்கு அதுதான் சரி இப்போது, என்கிறீரே, நீர்தானே கழக காரியதரிசி, ஏன் திட்டம் தீட்டித் தரக் கூடாது, கமிட்டிக்கு?

கழகக் காரியதரிசி, நான் அல்ல. ஆண்டு ஒன்று ஆகப்போகிறது நான் விலகி. இப்போது காரியதரிசி, திராவிடமணி, விடுதலைஆபீஸ், சென்னை. மேலும், நான், ஏதோ திட்டம் தீட்டிவைத்துக்கொண்டு, அதைத் தர மறுக்கிறேன் என்று நண்பர் எண்ணத் தேவையில்லை. இப்போதைக்கு, நான், கட்சிக்காகப் பிரசாரம் செய்வதைவிட செய்யாமலிருப்பது, நல்லது என்று நினைக்கிறேன்; அவ்வளவுதான்.

5. நீர் முன்பு ஜஸ்டிசைட் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தீரா?

இல்லை.

6. நீர் தமிழ் M. A.வா, ஆங்கில M. A.வா ?

இரண்டுமல்ல—பொருளாதாரம், அரசியல், சரித்திரம், ஆகிய தொகுப்பு M. A.

7. இயற்கை எய்திய, மோதிலால், கஸ்தூரிபாய் ஆகியோர்பற்றி, K. B. சுந்திராம்பாள் அவர்கள் பாடினார்களே, அதுபோல் அறப்போர் புரிந்த வ. உ. சிதம்பரனார் பற்றி, ஏன் பாடவேதில்லை.?

நியாயமானகேள்வி! ஆனால், நான் C. N. A; K. B. S. அல்லவே!! இருப்பினும், எனக்கும், இதுபற்றி, நண்பருக்கு இருப்பது போலவே மனக்குறைதான். ஆனால் அம்மையாரின் கவனத்தைக் கவரும் அளவிலும் வகையிலும், மோதிலால், கஸ்தூரிபாய், ஆகியோருக்கு, இந்நாட்டு இதழ்கள் பிரசாரம் புரிந்தன—வீரச் சிதம்பரனார் விஷயம், கொடுமுடிக் கோகிலத்தின் செவிக்கும் சிந்தனைக்கும் எட்டுமளவு பேசப்படவில்லை. அம்மையார் வ. உ. சி. அவர்களைப் பற்றிப்பாடாததற்குக்காரணம் அதுதான். நண்பர் போல, எண்ணற்றவர்கள் இதே கருத்துடையோராக உள்ளனர் என்பதை அறிந்து, அம்மையார் இனி பாடினாலும் பாடக் கூடும்.

8. பொங்கல்மலர், உண்டா?

உண்டு! " திராவிடன் "—ஒரு ரூபாய் விலையில்—" போர்வாள் "—எட்டணா விலையில் —'பொன்னி'—2-8-0 விலையில். நார்தனிபாக வேறு வெளியிட உத்தேசமில்லை.

9. கம்யூனிஸ்டு கட்சியினர் சில காலமாக நேரு சர்க்காரைப் பலப்படுத்த வேண்டும் என்று பேசுவது ஏன்?

நேரு கூட்டத்தாரின் பலம் சரிகிறது என்ற பயத்தால்!

10 தாங்கள் நாளைவரும் திராவிட நாடு பிரிவினைப் போராட்டத்திற்காகத் தங்களது சொந்தப் பொருளைக் கொடுத்து உதவி செய்வீர்களா? செய்யமாட்டீர்களா? செய்யத் தயங்குவீர்களா?

பொருள், செலவிட்டு நடத்தப்படும் போராட்டமல்ல, ஒரு நாட்டு விடுதலைப்போர். நண்பர், விடுதலைப் போர், பொருளை மட்டும் கொண்டு நடத்தப்படுவதல்ல என்பதை அறியாமல், கேட்கும் கேள்வியை ஒப்புக்கு அப்படியே ஏற்றுக் கொண்டாலும், கேட்பவர், கேட்கும் முறை, கேட்டுப்பெறுவது எதற்கு எனும் தெளிவு இவைகளைப் பொறுத்து—பொருள்—என்னிடம் உள்ளதுமட்டுமல்ல— எவரிடம் உள்ளதும்— கிடைக்கும். ஆனால் நான்கேட்டுநண்பரிடமிருந்து பெற்று, போராட்டத்துக்குத் தரும் நிலை வரும் என்று எண்ணுகிறேன். அவர் அப்போது, தயங்காதிருக்கவேண்டும்— இப்போதிருந்தே வேண்டுமானால், நண்பர், இதற்காகத் தமது மனதைத் திடமாக்கிக் கொள்ளலாம்.

11. ஆந்திரர், முதலியவர்கள், திராவிடநாடு பிரச்னைக்கு உடன்

(அடுத்த பக்கம் பார்க்க)

உருவான பலன்

2-ம் பக்கத் தொடர்ச்சி

விற்கு பொருட்களையும் ஆக்கலாம். மக்களுக்குள் வேற்றுமை காட்டாமல் சுகவாழ்வு அளிக்கலாம்.

இங்கு சர்க்கரைக்கு இருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டது. ஆலைகளில் உள்ள சர்க்கரை மூட்டைகளை இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளவும் தீர்மானித்திருக்கின்றது. கட்டுப்பாடு நீக்கப்பட்ட 8-ந் தேதி காலையிலேயே சர்க்கரை மொத்த வியாபாரிகள், கட்டுப்பாடு விலைக்கு இரட்டிப்பு விலை கேட்பதாகவும், சர்க்கரை கைவசம் இல்லை எனச் சொல்லப்படுவதாகவும் 'ஹிந்து'வில் செய்தி வந்திருக்கிறது. பம்பாயில் வீசை 2—4—0 ரூபாயிலிருந்து 3ரூபாய்வரையில் விற்கப்படுகிறது. கட்டுப்பாடு விலைக்குக் கூடுதலாக விலையைக் கூட்டவில்லையானால், ஆலைகளில் கையிருப்பில் இருக்கும் மூட்டைகளில் சரிபகுதி மாயமாக மறைந்து விடும் என்பதில் சந்தேகமில்லை. முன்னிலும் விலை கூடப் போவது நிச்சயம்.

இந்தியாவில் தேவையான அளவுக்குச் சர்க்கரை செய்யப்படுகிறது. பாகிஸ்தான்பிரிந்தபிறகு, தேவைக்கு அதிகமாகவே இங்குசர்க்கரை இருப்பதாக யூகிக்கலாம். அனைவரும் சர்க்கரை உபயோகிப்பவர்கள் எனச் சொல்வதற்கில்லை. எனவே, இங்கு 10 லட்சம் டன்னுக்குத்தான் தேவை இருக்கிறது. 1947-48-ல் 9¼ லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சர்க்கரை உற்பத்தியை விரிவாக்கத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

சுமார் 82 இராத்தல் கொண்ட மணங்கு மூட்டை ஒன்றுக்கு கட்டுப்பாடு விலை 20-14-0 ஆக இருந்தது. இரட்டிப்பு விலை கேட்பதாக பம்பாய் வியாபார சங்கத்தலைவர் கூறுகிறார். கையிருப்பிலுள்ள 9 லட்சம் மூட்டைகளை, மூட்டை ஒன்றுக்கு ரூ. 34க்கு விற்கத் தயார் என சர்க்கரை சிண்டிகேட் அறிவிக்கிறது. கட்டுப்பாடு விலையைக் காட்டிலும் ரூ. 13-12-0 கூடுதலாகிறது. இதனால் முதலாளிகளுக்கு மூன்றுகோடி பத்தொன்பது லட்சம் எதிர்ப்பாரா வகையில் லாபம் கிடைக்கிறது.

இது ஆலைக்காரர்களுக்கு மட்டும் கிடைக்கும் லாபம். கட்டுப்பாடு காலத்தில் மறைந்திருந்த கமிஷன் ஏஜண்டுகள் மீண்டும் வெளிக்கிளம்பி விடுவர். அவர்களுக்கான கமிஷன் வேறு இருக்கிறது. மொத்த வியாபாரம், சில்லரை வியாபாரம் போன்ற பல நிலைகளிலும் கைமாறி முடிவாக சர்க்கரை சாதாரண மக்களை அடையும் பொழுது மேலும் அதிகமாக விலை ஏற இடமுண்டு.

இறக்குமதி கட்டுப்பாட்டின் காரணமாக வெளி நாட்டிலிருந்து அதிகமாக சர்க்கரை இறக்குமதியாகப் போவதில்லை. ஆதலால் இன்று விலை ஏறும் சர்க்கரை, மறுபடியும் விலை குறைக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவுமல்லாமல் ஒரு முறை கூடுதலாக விற்று பெரும் லாபம் சம்பாதித்துப் பழக்கம் ஏற்பட்டு விட்டால், அதனை விரைவில் மாற்றுவதென்பது அனுபவசாத்தியமல்ல.

கண்ட்ரோல் விலை நஷ்டத்தைத் தந்திருக்குமானால், இதுவரையில் முதலாளிகள் அந்த விலைக்கு விற்க, வேண்டா வெறுப்பாகக் கூடச் சம்மதித்து இருக்கமாட்டார்கள். கையிருப்புச் சர்க்கரைக்குக் கொள்முதல் செலவோ, தொழிலாளர் கூலிச் செலவோ புதிதாகக் கூடுதலாகிவிடவில்லை. எனவே, கையிருப்பு மூட்டைகளுக்கு சரிபகுதிக்குமேல் விலை அதிகமாகக் கேட்பது எந்த வகையிலும் நியாயமாகாது. முதலாளிகளின் லாப ஆசையைத்தான் இது விளக்குகிறது.

கட்டுப்பாடு நீக்கத்தால் முதலாளிகளுக்கு உடனடியாக மூன்று கோடி ரூபாய்க்குமேல் லாபம் காத்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் சாதாரண மக்களுக்கு மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இதுதான் உருவான பலன்.

உற்பத்திச் செலவு எவ்வளவு—முதலாளிமார்கள் லாபம் எவ்வளவு-என்பவற்றிற்குச் சரியான புள்ளி விவரம் சேகரித்து, அதற்கான முறையில் விலையை நிர்ணயிக்க வேண்டும். இதற்கு மறுத்தால், சர்க்கரை ஆலைகளைத் தேசிய மயமாக்க முன் வரவேண்டும். இம்முறை ஒன்றுதான் பொதுமக்களுக்கு உருவான பலன் உண்டாக வழி ஏற்படும்.

இறக்குமதியாகும் சர்க்கரைக்குத் தடைவரி விதித்தும், மக்கள் வரிப் பணத்தைக் கொண்டு உதவித் தொகை கொடுத்தும், சர்க்கரைத் தொழில் இந்த நாட்டில் உருவாக்கப்பட்டது. இந்தத் தொழில் வளர்ச்சி முதலாளிகள் தொந்தி பெருக்கத்திற்கு மட்டும் ஏற்பட்டதல்ல. போனது போகட்டும். இனியாவது மக்களுக்கு நல்ல முறையில் பயன் படுமாறு இதனை மாற்றி அமைக்க வேண்டும்.

✵

5-ம் பக்கத் தொடர்ச்சி

படாவிடில்தமிழ்நாட்டையே, தனிச் சுயேச்சையான திராவிட நாடாகக் காண்பீர்களா?

தடையின்றி! பலமுறை தலைவர் இதைத் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

12 தமிழ்நாடு அப்படித் தனித்து இயங்க சாத்தியப்படுமோ?

நண்பரே! கேள்வியை உரத்த குரலில் கேட்டு விடாதீர்! ஸ்பெயின், போர்ச்சுகல், சுவிட்சர்லந்து, முதலிய எண்ணற்ற நாடுகள் கோபம் கொள்ளும்! அவைகளைவிடப் பெரியது, வசதிகளுடையது, தமிழகம்! தனி நாடு ஆக வாழமுடியும்.

13 ம.பொ.சி. பழைய சுயமரியாதைக்காரரா?

இல்லை! அவர் காங்கிரசில் தொண்டாற்றியவர். சுயமரியாதை இயக்கத்திலே சேர்ந்ததில்லை.

தைப் பொங்கலன்று :: :: வெளிவருகிறது

"வாழ்வு"

(மாத மிருமுறை)

முதல் இதழில்

முருகு. சுப்பிரமணியன்,
சு. கி. இராதாமணாளன்,
இளஞ்சேரன்,
சி. பி. சின்னராசு

மற்றும் பலரின் எழுத்தோவியங்கள் இடம்பெறுகின்றன.

		உள்நாடு	வெளிநாடு
தனிப் பிரதி	அணா	2	0-3
ஆண்டுக்கட்டணம்	ரூ.	3	4-8

முன் பணம் கட்டக்கூ
விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு:—

நிர்வாகி "வாழ்வு"
கீழ இராச வீதி, புதுக்கோட்டை.

குறிப்புகள்

"சென்னை மந்திரி சபை, உழவர்களின் கஷ்டத்தைப் போக்க, ஏதும் செய்யவில்லை. தானியக் கொள்முதல் வேலையோ, விவசாயிகளுக்கு வீண் தொல்லையாகிவிட்டது. மந்திரிகள், அதிகாரிகள் தந்தத்வறுன அடிப்படைக் கணக்குகளை வைத்துக் கொண்டு வேலை செய்கின்றனர். அதிகாரிகளோ, தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்."

என்று, மாஜிமந்திரி தோழர் குமாரசாமி ராஜா, M.L.A. அவனுசிதாலூகா விவசாயிகள் மாநாட்டிலே, நவம்பர் 23ந் தேதி பேசினார்.

தோழர் குமாரசாமி ராஜா, இவ்விதம், பகிரங்கமாக ஒரு மாநாட்டிலே, தமது சொந்தக்கட்சி அமைத்து நடத்தி வரும் மந்திரிசபையின் போக்கைக் கண்டித்துப் பேசியது, கேட்டும், மந்திரி சபை, என்ன செய்யமுடிந்தது? திருடனைத் தேள் கொட்டினால் என்ன செய்வான்! மாஜி மந்திரி இவ்விதம் பேசினபோது, இன்றைய மந்திரி ஒருவரும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்! இந்நாட்டிலே, நியாயமானதைபும், எவர் கூறினாலும், தாக்கத் துடிதுடிக்கும் 'பேனா வீரர்கள்'—தங்கள் ரோஷத்தையும் அடக்கிக் கொண்டு, இதும் இதுபற்றி எழுதாமலேயே இருந்துவிட்டனர் வெட்கமோ துக்மோ நாமறியோம்.

மாஜிமந்திரியும், மந்திரிசபைமீது இவ்வளவு பலமான தாக்குதலைப் பகிரங்கமாகச் செய்தாரேயொழிய, இந்த நிலையை மாற்ற வழி என்ன என்பதைக்கூற மறந்தார். அவருக்கும் அச்சம் இருக்கும்போலும்! கட்டுப்பாடு! ஒழுங்கு நடவடிக்கை!! என்று மிரட்டியிருப்பார்கள் போலும்.

* * *

பாகிஸ்தானில்உள்ள காங்கிரஸ் கட்சி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி தனித்து இயங்க வேண்டுமென்ற தீர்மானத்தை, சிந்து மாகாணத்திலுள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார். இதுபோலவே, பாகிஸ்தான் பிரச்னை வெற்றிகரமாக நிறைவேறி விட்டதால், இனி அகில இந்திய முஸ்லீம் லீக் தேவை இல்லை என்றும், எனவே அது கலைக்கப்பட வேண்டும் என்றும், முஸ்லீம் லீக் தீர்மானம் நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறது. போருக்குப் பிறகு படை கலைக்கப்படுவது போல வேலை முடிந்த பிறகு, இந்த 'கலைப்புகள்' தேவைதான். என்றகருத்து உருவாகிவிட்டது. ஏற்கனவே பல இடங்களிலே, லீக் கலைக்கப்பட்டும் வருகிறது.

* * *

ஹைதராபாத் சமஸ்தானத்துக்கும் இந்திய சர்க்காருக்கும், நடைமுறைஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதன்படி, இந்தியசர்க்கார், நிஜாமின் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. அதிலே மிக முக்கியமானது, சமஸ்தானத்துக்கு ஆயுத சப்ளை செய்ய இந்தியசர்க்கார் ஒப்புக் கொண்டிருப்பதாகும். ஹைதராபாத்சமஸ்தானம், இரகசியமாக, வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது என்றோர் வதந்தி முன்பு உலவிற்று. இப்போது இந்த வதந்தியை வீழ்த்த, இந்திய சர்க்கார், தாங்களே, ஹைதராபாத்துக்கு, ஆயுதம் வழங்க இசைந்திருக்கிறது.

ஓராண்டுக் காலத்திட்டமாக உள்ள இந்த ஒப்பந்தத்தின் மூலம், இரு அரசுகளுக்கும் இடையே நேசம் வளர வழி செய்ய வேண்டுமானால், இந்திய சர்க்கார், உடனடியாக நிலைமையைச் சிக்கலாக்கக் கூடிய எதனையும் அனுமதிக்கக் கூடாது.

சமஸ்தானத்திலே பொறுப்பாட்சிக் கிளர்ச்சி மும்முரமாக நடைபெற்று வந்த நேரத்தில், வகுப்புக் கலக பீதி முற்றிய சமயத்தில் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்திலே, மேற்கொண்டு, பொறுப்பாட்சிக் கிளர்ச்சி நடைபெறவேண்டுமா, எந்த முறையில், எந்த அளவில், என்பனவற்றை இந்திய சர்க்கார் பரிசீலனைசெய்திருக்கவேண்டும். செய்ததாகத் தெரியவில்லை.

சமஸ்தானப் பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சர்க்கார் பாஷையிலே பேசுவது, பிரச்னை மீது புகைப்படலம் போடுவதேயன்றி வேறல்ல.

சமஸ்தானப் பொறுப்பாட்சிக்கிளர்ச்சித் தலைவர் ராமதீர்த்தா பட்டவர்த்தனமாகவே பேசுகிறார், கிளர்ச்சி ஓயாது என்று—சென்னையிலும் டெல்லியிலும். காந்தியார் முதற்கொண்டு,காமராஜர்வரையிலே சந்தித்துப் பேசி இருக்கிறார், பணஉதவி தேவை என்றும் கேட்டிருக்கிறார்.

ஒருபுறம் ஒப்பந்தம் என்ற அமைதியும் நம்பிக்கையும் தரும் நிலைமை—மற்றோர் புறமோ கிளர்ச்சிக் குரல்.

இந்திய பூபாகத்திலுள்ள எல்லா முக்கியமான சமஸ்தானங்களும், பொறுப்பாட்சி வழங்கியுள்ள நிலையில், நிஜாம் மட்டும் தர்பார் நடத்திக் கொண்டிருக்க முடியாது. இதனை இந்திய சர்க்கார், தெளிவுபடுத்தி, நல்ல யோசனைகள் கூறிவிட வேண்டும்.

அதுபோலவே, ஒவ்வோர் நாட்டிலும் பெருவாரியாக உள்ள மக்களுக்கே, அதிகாரத்தில் பெரும் பங்கும், சிறுபான்மையோருக்கு சிறு அளவும் தரப்படுவதே, அரசியல் நடைமுறை நீதி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இந்தக் காலத்தில், ஜனத்தொகையில் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லீம்களுக்குச் சமஸ்தானத்திலே, நூற்றுக்கு 50 விகிதம் அதிகார இடங்கள் தரும் முறை, நிச்சயமாகக்கூடாது என்பதையும் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

இந்த இரு பிரச்னைகளும், உள்ளே ஊசலாடிக் கொண்டிருக்குமட்டும், எதிர்காலம் நிம்மதியை அளிக்காது. அந்த சமஸ்தானத்திலுள்ள, பழயதர்பார் போக்கும், அங்கு கோரப்படும் அரசியல் அநீதியான சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மை அதிகாரம் தரும் முறையும், கேடு பயப்பது மட்டுமல்ல, வீணாகப் பாமர மக்களின் மனதிலே குரோத எண்ணத்தை மூட்டவே உதவுகிறது. தர்பார் முறை ஏழை முஸ்லீம், முஸ்லீமல்லாதார் எனும் எவருக்கும் நன்மையோ, மதிப்போ, தருவது அல்ல. ஏழை மக்கள் ஈடேற, தர்பார் முறை உதவிசெய்யவே முடியாது. பாமர மக்கள் பாராளும் காலமிது; எல்லோரும் இந்நாட்டு மன்னர், என்பனபோன்ற கோட்பாடுகளை எவரும் மறுப்பதற்கில்லை. எனவே, ஹைதராபாத் ஆட்சி முறையிலே, தர்பார் போக்குமாறி, ஜனநாயகம் வளருவதும், அந்த ஜனநாயகத்தில் பெரும்பான்மையான எண்ணிக்கையுள்ளவர்களுக்கு அதற்கேற்ற அளவு அதிகாரம் கிடைப்பதும், மொத்த நன்மைக்குத் தேவை—மக்களாட்சிமலர அதுவே வழி. இந்தக் கொள்கையை மறைத்து, இந்து—முஸ்லீம் என்ற பேச்சுக்கு முதலிடம் வைத்து, பேசியும் எழுதியும், மக்கள் மனதைக்குழப்பும் பேர்வழிகளிடமிருந்து, பொதுமக்கள் தப்பவேண்டும். எனவேதான், ஒப்பந்த விதிகளிலே, இவைகளைச் சேர்த்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். இடைக்கால ஏற்பாடாக உள்ள இந்த ஒப்பந்த காலத்தை, இதற்குப் பயன்படுத்துவதுதான், நல்லறிவுள்ளோர், நாட்டு மக்களைக் கேட்டினிலே ஆழ்த்த விரும்பாதோரின் செயலாக இருக்கவேண்டும்.

* * *

ஆந்திரப் பகுதியிலே அமைக்கப்பட இருக்கும் ராமபாத சாகர் (அணைக்கட்டு)

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 14—12—47 [ஞாயிறு

தேன் இருந்த சிப்பியில் தேள்!

★

“ஆதரிப்பாரற்று, இருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, பச்சிளங்குழந்தைகளைப் பாதுகாக்க வகை தெரியாமல் அயர்ந்து, ஆண்டவனை நொந்து, அரசியலை நினைத்து வெதும்பி, நிர்க்கதியாய், யமனை வரவேற்று நிற்கும் காட்சி, பரிதாபமாக உள்ளது. சிலர் குழந்தைகளைப் பாதுகாக்க வகை தெரியாமல், அவற்றைப் பிரிந்தும், உயிர் துறந்தும் இருக்கிறார்கள்:”

இங்கே! இப்போது! புண்யபூமியில், புகழ்பெற்ற காங்கிரசாட்சியில். தேனும் பாலும் ஓடும் என்று நல்வாக்குக்கொடுத்து, ஆட்சியிலே அமர்ந்தனர்—இன்று தாயும் சேயும் ஒன்றாக வாழ்வதும் முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நோயற்றவாழ்வு—குறைவற்ற செல்வம் — என்று பேசினர் — இன்றோ, நொந்த உள்ளத்தினர், ஆற்றுவாரற்றுத் தேற்றுவாரற்று, பஞ்சைகளாகி, பட்டினியால் தாக்குண்டு, இத்தகைய நிலைமைக்கண்டும், கைகொடுத்துதவ முன்வராத காங்கிரசாட்சியைக்கண்டித்து, இந்தநிலையைஉண்டாக்கிய(?) ஆண்டவனையும் நொந்துகொண்டு, ஊரைவிட்டுச் செல்கிறார்கள்.

இது, திராவிட நியூஸ் ஏஜன்சி செய்தி அல்ல.

காங்கிரஸ் ஏட்டிலேஉள்ளசெய்தி.

கோயில்பட்டித் தாலுக்காவிலே, சிலபகுதிகளிலே, இவ்விதமான மோசமான நிலைமை இருப்பதாக, “தினமணி”யில் செய்தி காணப்படுகிறது. சிந்தையைச் சிதைக்கக்கூடிய இந்தச்செய்தியைச் சித்திர நடையிலே தீட்டியிருக்கிறது அந்த ஏடு.

மங்களம் தரும் பெட்டியிலே ஓட்டுகளைப்போட்டு, மகானுபாவர்களை நாடாளச்செய்து, அவர்கள் நீடூழிகாலம், நிம்மதியாக, ஆட்சி செய்யவேண்டும் என்று, ஆலவாயப்பனையும் அம்மை மீனாட்சியையும் வேண்டிக்கொண்ட மக்களுக்கு, வயிறார உணவில்லை.

சட்டசபைகளிலேயும் இந்தப் பேச்சு கிளம்பிவிட்டது.

காயல்பட்டினம் போன்ற பகுதிகளிலே, ஏழைமக்களுக்குப் போதுமான உணவு கிடைக்காததால், பட்டினிநோய் தாக்கிட, அவர்கள், உடல் வலிவிழந்ததுடன் சித்தமும் தடுமாறி, பித்தம் பிடித்தவர்போலாகிவிட்டனர் என்று ஓர் சட்டசபை அங்கத்தினர் கூறுகிறார் சட்டசபை மண்டபத்திலே.

எந்த மணிமண்டபத்திலே,‘எமது ஆட்சியின் மாட்சியைப் பாரீர்! இப்போது உள்ளசுபிட்சத்தைக்காணீர்! மக்கள் மனமாற எமை வாழ்த்துவதைக் கேளீர்! தொழில் பெருகுகிறது, வளம் வளருகிறது, வறுமை மடிகிறது, விஞ்ஞானம் வீறுகொண்டெழுந்து மக்களின் உழைப்பைக் குறைத்து, வசதிகளைப் பெருக்கச் செய்யும் அற்புதத்தைக் காணீர்! பாரதியாரின் கனவு நனவு ஆகிவிட்டதென்றறிந்து பள்ளுப்பாடுவீர்! ஆடுவீர்! பரங்கியரோ அவர்தம் பாதந் தாங்கிகளோ, இதுபோலச் செய்வரோ கூறீர்!”—என்று, வீரமுழக்கம், வெற்றி எக்களிப்பு, கிளம்பும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ, அந்த மணி மண்டபத்திலே, எந்த மணிமண்டபத்திலே, ஏகாதிபத்ய எதிர்ப்பு வீரர்களும், ஏழைபங்காளர்களும் வீற்றிருக்கிறார்களோ அந்த மணி மண்டபத்திலே, இன்று பேசப்படுவது, காடுமேடுகள் எல்லாம்கூட நாடு நகரமாகிவிட்டன என்ற களிப்பூட்டும் பேச்சல்ல, நாடு நகரங்களிலே, காட்டு நிலை வந்துவிட்டதோ என்று எண்ணும்படியான கவலை தரும் செய்திகள்பேசப்படுகின்றன.

கோயில்பட்டிப்பகுதிகளிலே பட்டினிப்பட்டாளத்தின் பவனி.

காயல்பட்டினத்துப்பகுதிகளிலே, காய்ந்தவயறினர், கருத்துக்குழப்பி, பித்தரான கொடுமை.

இந்தச் செய்திகளைக் காங்கிரசல்லாத நாம் கூறினால் கவனிக்கவும், மறுக்கக்கக்கூடிய கண்ணியவான்களிடம் ஆட்சி சிக்கிக்கொண்டது. எனவே, இனி நாம் பேசாமல், காங்கிரஸ்காரர்களையே, பேசச் சொல்கிறோம்—பிறகேனும் யோசிக்கட்டும்.

“கோவில் பட்டி தாலூக்காவில் பட்டினிச் சாவுகள் ஏற்படுவதாக தாலூகா, ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளிடமிருந்து எனக்குத் தகவல்கிடைத்திருக்கிறது.” என்று, கரையாளர், M. L. A. சட்ட சபையிலே, டிசம்பர் 11-ந் தேதி கூறினார்.

மற்றோர் M. L. A. கோசல்ராம் என்பவர்,

“நாங்குனேரி தாலூக்கா மூலக்கரைப் பட்டியில் உணவில்லாமல் 12 பேர் மடிந்திருப்பதாகத் தெரிகிறது.” என்று கூறினார், அதே நாளில், அதே மணி மண்டபத்தில்.

“கோவில்பட்டிக்கு சுமார் 6 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், அகத்திக் கீரையும் கடலைப் பிண்ணாக்கையும், தின்று நோயுற்று, பின் அதையும் தின்னமுடியாமல், 4 பேர் மடிந்திருப்பதாக எனக்குக் கடிதம் வந்திருக்கிறது” — என்று கூறுகிறார், தோழர் துரைராஜ பாண்டியன், M. L. A.

“அருப்புக் கோட்டைத் தாலூக்காவில் சில பட்டினிச் சாவுகள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது” என்று, வேறோர் M. L. A., சாமிநாதன் என்பவர் கூறுகிறார்.

இவர்கள் யாவரும் காங்கிரஸ்காரர்கள்—கருப்புச் சட்டையல்ல, ஆளவந்த கூட்டத்தினர், ஆரிய—திராவிடக் கிளர்ச்சிக்காரர்களல்ல—மகாத்மாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள், நம்மைப்போல் ‘மாபாவிகள்’ (! ?) அல்ல! இவர்கள் பேசுகிறார்கள், சட்டசபையில், இதுபோல். கொஞ்சமேனும் வெட்க உணர்ச்சியும், முன்னாளில் காட்டிய முடுக்கின் வாடையும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமென்பதிலே அக்கரையும், இருக்குமானால், சொந்தக் கட்சியினர், அதிகார பூர்வமாகத் தந்துள்ள இந்தச் சோகமூட்டும் செய்தியைக் கேட்டதும், மந்திரிமார்கள், வெட்கத்தால் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் அந்த மகானுபாவர்களோ, ‘கலெக்டர் துரை’யின் ரிபோர்ட்டுகளை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு, கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, கர்ஜிக்கிறார்கள், ‘சாவு காலராவால் ஏற்பட்டதேயொழிய பட்டினியால் அல்ல’ என்று. முன்போர் சமயம், தோழர் பிரகாசம், ஆந்திரப் பகுதி யொன்றிலே, பட்டினிச் சாவு ஏற்பட்

தாகப் பேசினார், மந்திரிகள் மறுத்தனர், மாஜி முதல்வர், மறுப்புக்கு மறுப்புதந்தார், இப்போதைய மந்திரிகள் அதற்கு மறுப்பு அளித்தனர்—மாஜி அதற்கு மறுப்பளித்தார்—இப்படியே பேச்சுஊசலாடிக்கொண்டிருந்தனர். இப்போதும், அது போலவே நடைபெறக்கூடும். ஆனால் இதிலே, முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம், பட்டினியால் செத்தார்களா, பாழும் நோயால் மடிந்தார்களா என்பதல்ல, பஞ்ச நிலைமை இருக்கிறதா இல்லையா, ஏழையின் வாட்டம் அதிகரித்திருக்கிறதா இல்லையா, என்பதுதான். பிணங்களைக் கணக்கெடுக்கவோ, பிணப் பரிசோதனை நடத்தி, சாவின் காரணத்தைக் கண்டறிந்து கூறவோ அல்ல, 'கனம்கள்' இருப்பது—மக்களுக்கு வாழ்வு அளிக்க இவர்கள் பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எனவே பல M.L.A. க்கள், பகிரங்கமாகச்சட்டசபையிலே நிலைமையை விளக்கியது கேட்டும், பரங்கி முறைப்படி, கலெக்டர் துரை அனுப்பும் காகிதக் கேடயத்தைத் தூக்கிக்கொண்டு பாதுகாப்புப் போர் புரிவது அழகல்ல. பதைத்திருக்க வேண்டும். வெட்கத்தால், டாக்டர் சுப்பராயன் போன்ற 'ஆஜானுபாஹு'வும், அவினாசியார் போன்ற 'நோஞ்சல் உருவில்' நிற்க வேண்டும். அந்தப் பகுதிகளுக்குச் சென்று நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டும். வாழ்வளிக்க வந்தவர்கள், மக்களுக்குப் புதுவாழ்வு, பூரிப்பான வாழ்வு, கிடைக்கச் செய்ய முடியாவிட்டாலும், இருக்கும் வாழ்வாவது, சின்னாபின்னமாகாதபடி, பாதுகாக்கவேண்டும். இப்படிப்பட்ட நிலையிலே, உணவுப்பொருள் கன்ட்ரோலை ஒழிப்பது சரியா, என்று நெஞ்சில் கைவைத்து யோசிக்கவேண்டும். வங்கத்தின் வாடை வீசுகிறது என்று காங்கிரஸ் M. L. A. க்களே கூறும் போதும், நாங்கள் பிரச்சார பலத்தைப்பெற்றுள்ள சிங்கங்கள், என்று பேசிக்கொண்டிருக்கக்கூடாது. ஆளவந்தார்கள், மாள்கிறோம்,என்றுஅழுதுகொண்டே அருப்புக்கோட்டை, நாங்குனேரி, மருங்காபுரி, கோயில்பட்டி, போன்ற பகுதிகளிலே, மக்கள் ஓலமிடுகிறார்கள், இங்கே, சட்டசபையிலே, இதற்காவன செய்வதற்குச் செலவழிக்க வேண்டிய நேரத்தையும் திறமையையும், ஸ்பெஷல் போலீஸ் அமைப்பு பற்றிப் பேசவும் வேறுபல வற்றுக்கும் விரயமாக்குவது, முதல்தரமான பைத்யக்காரத்தனம்.ஏன், இந்தநிலைமை ஏற்பட்டது? இந்தநிலைமையிலே,நூறிலோர் பாகம், காங்கிரசல்லாத வேறுயாரேனும் ஆட்சிசெய்யும் போது ஏற்பட்டிருக்குமானால், எவ்வளவு, எவ்வளவு ஆர்ப்பாட்டம் கிளம்பி இருக்கும். எவ்வளவு கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கும். பத்திரிகைகள் எவ்வளவு பதறித்துடிதுடித்து, பாய்ந்து பிடுங்கி இருக்கும். இப்போது, சட்டசபையிலே, பகிரங்கமாக இதுபற்றிய பேச்சு கிளம்பியும் அமைச்சர்கள், ஆவன செய்வோம்-அது கவனிக்கப்படுகிறது—அதற்கு மேல்கூறுவதற்கில்லை-என்ற பழய பாடபுத்தகத்தில் பயின்றதைக்கூறிக் கொண்டு, காலந்தள்ளுகிறார்கள். ஜனநாயக உணர்ச்சி அரும்பளவாவது இருக்குமானால், இந்நேரம், நாடு கொதித்திருக்கும், மந்திரிசபை மருண்டிருக்கும், கட்சிக் கூட்டத்திலே கலகம் ஏற்பட்டிருக்கும்,நெஞ்சத்துடிப்பு அதிகமுள்ளவர்கள் ராஜிநாமாச் செய்திருப்பர், அழுத்தக்காரர்கள், சட்டசபைக்கு வராமலிருந்திருப்பர். ஆனால் இங்கோ—எது நடந்தாலும் — இம்மென்று கேட்கவும் பயம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால், மௌனம் குடிகொண்டிருக்கிறது. வாழ்வளிக்க வந்தவர்கள், செத்தவர்களைக் கணக்கெடுத்துக்கொண்டும், செத்தகாரணத்தை ஆராய்ந்து கொண்டும் உள்ளனர். காங்கிரசன்றி பிறிதோர் கட்சிவேண்டேன் பராபரமே என்று அரசியல் சிந்துபாடும் அன்பர்களை இந்த நிலைமையை வளரவிடுவது சரியா என்று யோசித்துப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். எத்தனை ஆயிரம் மேடைகளிலே, அன்பர்கள் பாடியிருப்பர், எமதாட்சியிலே, பட்டினி இராது, பஞ்சம் தலைகாட்டாது, ஏழை வதையமாட்டான், எத்தன் வாழமாட்டான், பொங்கும் மங்களம் எங்கும் தங்கும் — என்றெல்லாம். எத்தனை எத்தனை மேடைகளிலேறி, ஜஸ்டிஸ் கட்சியைச் சுட்டிக்காட்டி, "காலா காலத்திலே மழை உண்டா! சம்பாவிதைத்தால் கார் ஆகிறது! கார் போட்டால், சாவி ஆகிறது. மாபாவிகள் ஆளும்போது, இவ்விதந்தானே நேரிடும்" என்று பேசியிருப்பர். இப்போது, புண்யபுருஷர்கள், தியாக மூர்த்திகள், கண்கண்டதெய்வத்தின் கழலடி தொழுதிடும் அன்பர்கள் ஆள்கிறார்களே, இப்போது, பஞ்சம், பட்டினி, நோய்நொடி, ஏற்படக் காரணம் என்ன? மாபாவிகள் காலத்திலேயும் நேரிட்டிராதபடியான, மனம் நோகும் நிலைமை வரக் காரணம் என்ன? பிண்ணாக்கு தின்பவர்களும், பித்தம் கொண்டலைவோரும், பிள்ளையை இழப்போரும் போக்கிடமில்லையே என்று அழுவோருமாக, மக்கள் மாறிடக் காரணம் என்ன? ஆளவந்தவர்கள், ஆகமம் அறிந்தவர்களாயிற்றே, அனவரதமும் கருணாமூர்த்தி காந்தி மகாத்மா என்றுபாடுவோராயிற்றே அவர்கள் காலத்திலே, இப்படியா, நிலைமை இருக்கவேண்டும். இப்படி நிலைமை இருந்தும், அவர்கள் கவலையற்று இருக்கக் காரணம் என்ன? சட்டசபையோ, கட்சிப் பட்டியிலே பயிற்றுவிக்கப்பட்டவர்களின் அமருமிடம். அமைச்சர்களின் போக்கை, அமைச்சரல்லாதார் கண்டிக்க, 'லைசென்சு' கிடையாது. மிகவும் வேண்டியவர்களுக்கு மட்டும் சிறு, 'கோட்டா' உண்டு! மற்றவர்கள் பேசினால், கட்சிக் கட்டுப்பாடு கெட்டுவிடும், என்ற பயம் காட்டப்படும். மீறினால், ஒழுங்கு நடவடிக்கைக் குளம்பு. எனவே, ஆட்சியாளர்களின் போக்கை மாற்றும் சக்தி, கட்சி அங்கத்தினர்களுக்குக் கிடையாது. எதிர்க்கட்சியோ, பெரிதும் முஸ்லிம்கள். எனவே அவர்கள் அமைச்சர் போக்கிலே குற்றங் குறை கூறத் தொடங்கினால், இருக்கவே இருக்கிறது, புதிய பாஷை! "இந்த இஸ்மாயில்கள் இப்படி எல்லாம் செய்து கொண்டு இங்கே இருப்பதைவிட, பாகிஸ்தான் போகட்டும் —போகும் போது அல்லா பிச்சையையும் கூடவே அழைத்துக்கொண்டு போய் விடட்டும்" என்றுபேசி அவர்களின் வாயை மூடிவிட முடிகிறது. வடநாட்டுக் கலகச்செய்திகளைப்படித்து, மனக்குழப்பமடைந்திருக்கிற மக்களுக்கு, இப்போது, யார், முஸ்லீம்கள் மீது எதைக் கூறினாலும், நம்பும் போக்கு இருக்கிறது. ஆளவந்தார்கள் இந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, சட்டசபையிலே ஒருவிதமான எதிர்ப்புச் சக்தியும் உருவாக முடியாதபடி தடுத்துவிடுகிறார்கள். காங்கிரஸ் கட்சியினரோ, கட்டுப்பாட்டினால், கண்மூடி மௌனிகளாகிவிட நேரிட்டுவிட்டது — எதிர்க்கட்சியினரோ, 'இந்த இஸ்மாயில்கள்'—

எனவே அவர்களைச் சுலபத்திலே வாய்பொத்தியிருக்கச் செய்ய வசதி இருக்கிறது. இந்நிலையில், ஆட்சியாளர்களின் போக்கை, ஆராய, அலச, திருத்தம் கூற, கண்டிக்க வழி எது? காங்கிரஸ் கட்சியாலே மட்டுமே கதிமோட்சம் உண்டு என்று கருதும், நண்பர்கள், இதனை நன்கு சிந்திக்க வேண்டுகிறோம்.

ஜனநாயக முறைப்படி, ஒரு கட்சி ஆளும்போது, எதிர்க்கட்சியின் பேச்சை, அச்சத்துடன், கவனிக்கும். ஏனெனில், ஆளும் கட்சியின் போக்கு கேடு பயப்பது என்பதை விளக்கும் பொறுப்புடன், முடியுமானால், தானே ஆளவும், எதிர்க்கட்சிக்கு, உரிமையும் இருக்கிறது.

நமது செயலைக் கவனிக்கவும், நம்மை நீக்கவும், நமது இடத்தைப் பிடித்துக்கொள்ளவும், ஒரு உரிமை கொண்ட கூட்டம் இருக்கிறது, என்ற அச்சம், ஆளும் கூட்டத்திற்கு, இருந்தால் மட்டுமே, ஜனநாயகம் 'நல்லாட்சி' என்ற கனிதரும்.

இங்கு இன்று இந்நிலை இல்லை.

தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பார்கள். எதிர்க்கட்சியென்ற ஒன்று இல்லாவிட்டால், இடுப்பொடிந்தவர்கள் கூடத்தான் ஹிட்லராகிவிட முடிகிறது. இன்றுள்ள நிலை இது. எனவேதான், M.L.Aக்களின் பேச்சு, காங்கிரஸ் ஊழியர்களின் கண்டனம், காங்கிரஸ் கமிட்டிகளின் அறிக்கை, எதற்கும், மதிப்பளிக்கும் மனப்பண்பு மங்கிமடிகிறது. ஒருவரிருவர், கோசலராம்களோ, கரையாளர்களோ, கேட்டால், இவர்கள் தங்களுக்கு மந்திரி வேலை கிடைக்கவில்லையே என்ற வயிற்றெறிச்சலால் இதைச் செய்கிறார்கள் என்று கூறிவிடுவார்கள். காங்கிரஸ் ஊழியர்கள் பேசினால் அதே பதில்தான்! ஆனால் அவர்களுக்கு, மேலும் கொஞ்சம் காரசாரமானடோஸ் தருவார்கள். "ஐயா! நான் காங்கிரசுக்காக, நாட்டுக்காக, எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? சிறைசென்றேன். தடியடி பட்டேன். குடும்பம் நசித்தது. ஆகஸ்ட்டுப்போரிலே, அந்தப்பாலத்தைஉடைத்தேன், இந்தக்கட்டிடத்தை இடித்தேன், அலிபுரத்தில் அவதிப்பட்டேன்!" என்று பேசினாலோ,

"உண்மை ஊழியர்கள் என்றால் அவர்கள் உண்மையிலேயே ஊழியம் செய்யவேண்டும். இதைவிட்டுவிட்டு மந்திரி பதவிக்கும் M. L. A. பதவிக்கும் வேட்டையாடித் திரிவது ஊழியர்களுக்கு அழகல்ல. மந்திரிப் பதவி தரவில்லை, எம். எல். ஏ. வாக தன்னை ஆக்கவில்லை என்று கத்துவதிலோ எழுதுவதிலோ அர்த்தமில்லை. ஆகஸ்டில் நான் வெடிவைக்கவில்லையா, என்னை ஏன் எம். எல். ஏ. வாக ஆக்கக் கூடாது என்று கேட்பது கூலிக்கு மாரடித்த எனக்கு மடிப்பணம் எங்கே என்று கேட்பது போலாகும், ஆகஸ்டில் வெடிவைத்தது எம். எல். ஏ. பதவிக்கு அச்சாரம் போட்டதா? யார் வெடி வைக்கச் சொன்னார்கள்? அப்படிதான் வைத்தவெடி வெடித்தாவது தொலைந்ததா? என்ற எக்கச்சக்கமான கேள்விகளெல்லாம் பின்னர் வருமென்பதை இந்த சிகாமணிகள் உணருவதில்லை. வெடி வைப்பதாகச் சொல்லி வாங்கின பணம் எங்கே, போலீஸ்காரன் வந்து நின்றதும் உண்மைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கூறி மற்ற சகாக்களை ஏன் காட்டிக்கொடுத்தாய்? பிடிபடாமல் இருந்தால்கொடுத்த பணத்துக்கு கணக்கு கேட்பார்களென்றுதானே இந்த தந்திரம் என்றெல்லாம் கேட்பார்களே என்பதை எழுதுகிறவர்கள் மறந்துவிடுகிறார்கள்."

என்று, கேட்கிறது, அதிதீவிரக் காங்கிரஸ் ஏடு.

ஆக, யார் கேட்க முடிகிறது? எவரிடம், ஆளவந்தார்களுக்கு, 'அச்சம்' இருக்க முடியும்? இது இல்லாவிடத்து ஆட்சிக்கு ஜனநாயகக் கோட்பாட்டின் மதிப்பு எப்படி ஏற்படும்? ஜனநாயக அரும்பா முன்பு, மக்களின் இன்ப மணம் எழ முடியாது! எங்கோ, பிணவாடை அடிப்பதாக, M. L. A. கூறினாரே, அது ஆதாரபூர்வமானதோ அல்லவோ நாமறியோம், ஆனால், ஜனநாயகம் கருவிலே சிதைந்து விட்டிருப்பதால், துர்நாற்றம், நன்றாக அடிக்கிறது. இது ஆராய்ச்சிபூர்வமான உண்மை! சட்டசபையிலே அங்கத்தினர்கள் தூங்குவதுபற்றி, சின்னாட்களுக்கு முன்பு, பேசப்பட்டதல்லவா, அது தூக்கமல்ல—மயக்கம்—துர்நாற்றத்தால் ஏற்பட்டது என்றே எண்ண வேண்டி இருக்கிறது.

அந்த மயக்கம் போகவும், மக்களின் நல்லாட்சி உதிக்கவும், வேண்டுமானால், ஆளவந்தார்களின் கவனத்தை இழுக்கக் கூடியதும், அவர்களின் போக்கைக் கட்டுப்படுத்தக் கூடியதுமான, எதிர்க்கட்சி ஏற்பட்டாக வேண்டும். அது, காங்கிரஸ் கமிட்டிகளிலே கட்டிடத்துக்குள்ளே, காதோடு காது வைத்தது போலப் பேசும்முறையினாலோ, இரண்டோர் கண்டனம், சில சுற்றறிக்கை, இவைகளாலோ ஏற்பட்டுவிடாது. மயக்கமற்ற நிலைமை ஏற்படவேண்டும்—காங்கிரஸ் ஓர் மகத்தான ஸ்தாபனம் அதிலிருந்துகொண்டேதான் எதையும் செய்ய முடியும். எதிர்த்துப் பணியாற்றக் கூடாது, என்ற மயக்கம் போக வேண்டும். காங்கிரசின், குரலுக்கு ஏகாதிபத்யம் இருந்தபோது, இருந்த, பொருளும் பலமும்—இப்போதும் இருக்குமென்று எண்ணுவதோ, இருக்கச் செய்யவேண்டுமென்று பணிபுரிவதோ, நிச்சயமாக நாட்டை பாசிசப்பிடியிலே கொண்டு போய் விடுமேயொழிய, வேறில்லை என்பதை உணர்ந்து, நாட்டுக்கு வாழ்வளிக்கும் திட்டங்களைத் தீட்டி, ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும். இல்லையானால், கோயில்பட்டிப் பகுதியின் நிலைமை, வேறுபல பட்டிதொட்டிகளில் ஏற்பட்டாலுங் கூட, ஏனென்று கேட்க யாரும் இருக்க முடியாது. தேனிருந்த சிப்பியிலே, தேள் இருந்து கொட்டிய கதைபோல, நாட்டு விடுதலைப்போருக்குரிய சக்தி இருந்த கட்சியிலே, நாட்டை நாஜீசத்திடம் ஒப்படைக்கும் பலம் இன்று இருக்கிறது. அந்த பலம், இன்று, பெருமையையும் பூரிப்பையும் தருவதாகக் கூடத் தோன்றக்கூடும். ஆனால், அந்த 'பலம்' உண்மையில், பேராபத்து! என்பதை உணரவேண்டும். இதற்கு, எவ்வளவுக்கெவ்வளவு காலம் அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு, நாட்டுக்குக் கேடு அதிகரிக்கிறது என்றேபொருள். ஏகாதிபத்யஎதிர்ப்புக்காக, நாட்டிலே, உள்ள "சக்தியை" ஒருமுகப்படுத்தியது காங்கிரசல்லவா, ஈட்டிமுனையாக நின்றது காங்கிரசல்லவா, என்று எண்ணி, காங்கிரசிடம் பற்றும் பாசமும் கொள்வது, புரிந்து கொள்ளக் கூடியதுதான். ஆனால், 'பலசக்திகள்' ஒன்று கூடின என்ற அடிப்படை உண்மையை, மேலும் கொஞ்சம் அலசிப்பார்த்தால், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகக், கூடியபலவித சக்திகள் அந்த குறிப்பிட்ட காரியம் முடிந்த பிறகு, 'ஒன்றாக' இருக்கமுடியாது, இருக்கக்கூடாது,

இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டால், அந்தப்பலவிதமான சக்திகளில், ஏதேனும் ஓர், சக்திக்கு மற்றவை அடிமைப்படும், பலியாகும், என்பது விளங்கும். அந்த நிலையிலே, 'ஒன்று கூடி' வேலை செய்பவர் எவர் லவா? என்று பழையபாசத்தை விட்டுமே எண்ணினால், நிச்சயமாகப் பாசிசம் வளரத்தான் செய்யும். ஒட்டிய வயிற்றுக்காகக் கந்தனுக்கும் ஒய்யார புருஷன் பிர்லாவுக்கும், சம்பூரண சாஸ்திரிகளுக்கும் சடையனுக்கும், இவர்கள் யாவருக்கும் பொது எதிரியாக ஓர் ஏகாதிபத்யம் இருந்தது, எனவே அதற்கு ஓர் கூட்டு முனை தேவைப்பட்டது. அந்தப் போர் எதிர்போனபிறகு கூட்டு முனை இருந்தாக வேண்டும் என்று வாதாடுவது, எப்படிப் பொருந்தும்? கூட்டுமுனை இருப்பது, ஹிட்லரிசத்தைக் கூட்டி வரும் வழியே. நாட்டை வாழவைக்காது.

கூட்டுமுனை என்ற மயக்கமொழி கூறி மக்களை ஏமாற்றும் திறமும் வசதியும் தங்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையினாலேதான். பிணம் கீழே வீழ்ந்ததும், நெரித்த புருவமும் நிமிர்ந்த மார்பும், முடுக்குப் பேச்சும், கொண்டவர்களாக ஆளவந்தார்கள் காட்சி அளிக்கின்றனர். பசியால் மெலிந்து, பாமரையும் நொந்துகொள்ளும், பரிதாபத்துக்குரிய ஏழை மக்கள், பாடுபட்டும் பலன் காணா பாட்டாளிகள், ஆகியோரின்பேரால், தூக்கும் இயற்கைச்சக்தி, அதைவிழிக்கச் செய்யக் கூடிய விஞ்ஞான சக்தி, இவைகளைப் பயன்படுத்தும் நோக்கமும் அறியாமல் நோன்பும் பூஜையும் போதும், என்ற எண்ணித் தேம்பும் மக்கள் பேரால் முற்போக்கு நோக்குடையோரை அழைக்கிறோம், பாசிசத்தை வீழ்த்த, ஜனநாயகத்தை வாழ்த்த, பணிபுரியவருக என்று!

●

குறிப்புகள்

7-ம் பக்கத் தொடர்ச்சி

திட்டத்துக்கு, 127 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டுவிட்டு, இதற்காக, சர்க்கார், கடன் பத்திரங்களை வெளியிடக்கூடும் என்று ஜாடைகாட்டி இருக்கிறார். இவ்வளவு பெரும் தொகை செலவிட்டுக் கட்டப்படும் திட்டத்துக்கு, கடன்வாங்கிச் செய்யப்படும் திட்டத்துக்கு, இப்போது, ஆர்வமும் அவசரமும் காட்டப்படுவதைவிட, ஆந்திர மாகாணப்பிரிவினை உருவாவதைத் துரிதப்படுத்தி, ஆந்திரருக்கு என்று அமையும் சர்க்காரிடம் இந்த பொறுப்பும் பாரமும் உள்ள காரியத்தை ஒப்படைப்பது, நல்லது என்பது நமது கருத்து. நாடாள்வோர் யோசிக்கவேண்டுகிறோம்.

* * *

மேற்கு வங்காளத்தில் (இந்திய யூனியன்) பொதுஜன அமைதிச் சட்டத்தை எதிர்த்து, பலத்த கிளர்ச்சி நடைபெறுகிறது. தோழர் சரத்சந்திரபோஸ், இதனை முன்னின்று நடத்துகிறார். போஸ் கட்சியினர், கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள் தொழிலாளர், மாணவர், மற்றும் பல முற்போக்குச் சக்திகள் யாவும், கூட்டாக இதிலே கலந்துள்ளன. சட்டசபை முன்னால் மறியல் நடைபெற்று, போலீஸ் தடியடியும், துப்பாக்கிப் பிரயோகமும் ஏற்பட்டிருக்கிறது. 20 பேருக்கு மேல் காயமடைந்தனர். ஒருவர் மாண்டார். இங்கு காங்கிரசாட்சிதான் நடைபெறுகிறது. அன்பர் ஆச்சாரியார்தான் கவர்னர்!

* * *

அன்பர் ஆச்சாரியாரின் 70-வது பிறந்த தினத்தை ஒட்டி, சென்னையில் சிறப்பான முறையிலே விழாக் கொண்டாடப்பட்டது முதலமைச்சர் உட்படப் பலரும், ஆச்சாரியாரின் அருங்குணங்களைப் பாராட்டினர். அவர்களுக்கு நன்றி கூறி, ஆச்சாரியார் எழுதிய பதிலில், எனக்கு 70 வயது ஆகவில்லை! என்று குறிப்பிட்டிருக்கிறார்.

✲

வாழ்க்கை ஒப்பந்தம்

"ஆடம்பரமின்றியும், அர்த்தமற்ற சடங்குகள் ஏதும் இல்லாமலும், நடக்கும் இத்திருமண முறைதான் காலத்திற்கேற்றது, நாகரிகமானது. திருமணத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, மணமக்கள் இருவரின் இதயங்களும் ஒன்றுபட்டுள்ளதா என்பதுதான்." என்ற Dr. L. K. முத்துசுவாமி [ஈரோடு காங்கிரஸ் முக்கியஸ்தர்] அவர்களின் தலைமையுரையுடன் ஆரம்பமாயிற்று தோழர்கள் S.K. சாமி—சாரதா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சி. 7-12-47 ஞாயிறு காலை 9-மணிக்கு மணமகன் இல்லத்தில் நிகழ்ச்சி நடந்தது. தோழர்கள் இரா வழுதி, புலவர் மாணிக்கம், சேலம் சித்தையன் ஆகியோர் முறைப்படி வாழ்த்துக்கள் சொல்லிய பின் பெரியார் அவர்கள் ஒரு மணி நேரம் பயனற்ற பழமையில் இன்னும் மூழ்கியுள்ள மக்களுக்குள்ள மோகம், விஞ்ஞானத்தின் அருமை பெருமைகளை சரிவர உணராதிருக்கும் நிலைமை, காலத்திற்கேற்ற வகையில் கருத்துக்களும் காரியங்களும் அமையவேண்டியதின் அவசியம், இன்று இளைஞர்களிடையே உருபெற்று வரும் புதுமை உணர்ச்சி ஆகியவைகளைப்பற்றி மிகவும் அழகாக விளக்கி இருந்தவர்களின் சிந்தனைக்கு விருந்தளித்தார். கடைசியாகத் தோழர் C.N. அண்ணாதுரை அவர்கள் மணமக்களை வாழ்த்தினார். மணமக்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது. தோழர்கள் ஈரோடு சேர்மன் S.K. சென்னியப்பன் அவர்கள், M. சிக்கையா அவர்கள், S.K. ராமசாமி அவர்கள், குதரத்துல்லா சாகிப் அவர்கள், கேசவலால் சேட் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

விரைவில் வெளிவருகிறது

காலண்டர்

1948-ம் வருடத்திய பிக்சர் காலண்டர்

பெரியார் ஈ. வே. ரா. அண்ணாதுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இரா. நெடுஞ்செழியன், டி.பி. வேதாசலம், க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத் ஏ.பி. ஜனார்த்தனம் என். வி. நடராசன் திராவிடம் இழந்த பன்னீர் செல்வம், என். அர்சுனன் முதலானவர்கள் படங்கள் ஒருங்கே அமையப் பெற்று கண்கவரும் முறையில் மூன்று கலரில் ஒரே காலண்டராக வெளிவருகிறது.

மாதம் ஒருமுறை தேதி கொண்டது.

விலை அணா 6

மாதிரிபெற ஏழு அணா பில்லைகள் அனுப்புக.

கொஞ்சப் பிரதிகளே அச்சிடுவதால் தங்கள் தேவைக்கு இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளவும்.

விலாசம்:—

திராவிடன் பதிப்பகம்,
P. B., 18, வேலூர் N. A.

★ இராக்காயி ★

ருக்மணி இராசாராம், பி. ஏ. (விருதுநகர்)

ஆம். அவள்தான். அவளேதான் இராக்காயி. அவள் இராக்காயி மட்டுமல்ல, அடிமை இராக்காயும் ஆவாள் அல்லும் பகலும் ஆண்டையின் வீட்டில் வேலை செய்யவும், ஆண்டையிடும் கட்டளைகளைச் செய்து முடிக்கவும், பரம்பரையாக வந்த அடிமைக் குடியில் பிறந்தவள் இராக்காயி. சிறுவயதிலிருந்தே ஆண்டையின் வீட்டு வேலைகளைச் செய்து வருகிறாள். அதற்குப் பதிலாக ஆண்டை (ஐயர்) கொடுப்பதெல்லாம் முந்தியநாள் மீதப்பட்ட பழைய சோறும், குழம்பும்தான். இதைத் தவிர வருடத்திற்கு ஒருமுறை இரண்டு கெஜம் துணி கிடைக்கும். வேறு சம்பளம் ஒன்றுங்கிடையாது. அவள்தான் ஐயருக்கு உழைக்கப் பிறந்த பாவி மகளாயிற்றே. இது மனுநீதியின் நியதிப்படி, அடிமைகளின் தர்மகர்த்தாவான ஆண்டை ஐயர்களின் நீதிப்படி செய்யும் அகம்பாவமான அக்ரமமான, ஒழுங்கற்ற செய்கைகளில் ஒன்றாகும்

இராக்காயியினதுதினசரிசம்பவங்களில் ஒன்று; ஐயர் மனைவி, தன் காலில் சமையல் செய்யும்போது பானை தவறி விழுந்த சூடு தாங்காது கதறுகிறாள்; அதைச் சிறிது உற்றுக் கேளுங்கள். சப்தம் சிறிது முரடாகவே இருக்கும் கேளுங்கள். "அடீ! இராக்காயி!! சனியன்!!! நீ எந்த நேரம் தான் இங்கே வந்து சேர்ந்தாயோ. என் காலைக்கெடுத்துட்டியே, ஐயோபோக்கிரிக் கழுதையால் என் கால்போச்சே" என்று கூறி இராக்காயிக்கும் இரண்டு மூன்று உதைகள் கொடுக்கிறாள்.

இவ்விதம் இராகாயியும், நாளொரு உதையும், பொழுதொருமிதியுமாக ஆண்டையின் வீட்டிலும் வயலிலும் வேலை செய்துவிட்டுப் பொழுது சாயவும் வீடு சேர்கிறாள். நல்ல பக்குவ வயது அடைந்து ஆள் வாட்டசாட்டமாக மாறிவிட்டாள். ஆள் நிறம் கருப்புதான். சடையைக் கோணவகிடு எடுக்கவில்லை. மினுக்கிக் குலுக்கத் தெரியாது. ஆனால் வாலிப வயது முகவெட்டுக்காரி. அவளுக்கேற்ற ஜோடி மூக்கன்தான். மூக்கன் இராக்காயியின் சொந்த அத்தை மகன் மூக்கனுக்கு இராக்காயியின் மேல் எப்போதும் ஒரு நோட்டம் இருந்துகொண்டே இருந்தது. இராக்காயிக்கும் மூக்கன்மேல் ஆசைதான். இருவரும் நிலாக்காலங்களில்வயல் கரைகளில் கைகோர்த்துக் கொண்டு சுற்றுவார்கள். அவர்களுக்குத் தெரிந்த கிராமியக் காதல் பாட்டைப் பாடுவார்கள். அதைக் கேட்க இனிமையாயிருக்கும்.

மூக்கன் ஒரு அரசியல் வாதியாகவும், பெரிய சமூக சீர்திருத்தக்காரனாகவும் இருந்தான். சேரியிலே அவனுக்கு மிகுந்த மதிப்பு, செல்வாக்கும்கூட. அவன்மேடையில், முதல் தடவையாக ஏறியதும் பேசுவது, "பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே" என்ற புரட்சி வார்த்தைகளே, இது உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த சேரிவாசிகளுக்கு அமிர்தம்போல் இருந்தது. இவ்விதம் அவன் உண்மையை எடுத்துக் கூறியதன் பலன் ஒரு பக்கம் புகழும், மற்றொரு பக்கம் பகையுமே.

மிராசுதாரின் கையாட்கள் மிரட்டலாயினர். ஏன் மிராசுதாரரே ஒருதடவை கூப்பிட்டுத் தூக்கி விடுவதாகப் பயமுறுத்தி அனுப்பினார்.

ஆனால் மூக்கன் இளங்காளை, பயமறியாக் கன்று எனலாம். உண்மையை எடுத்து உரைப்பதில் அஞ்சாநெஞ்சன். தன் சமூக மூதாதைகளுக்கு ஆண்டைகள் செய்திருக்கும் கொடுமைகளை அறிவான்.

மிராசுதாருக்கு, மூக்கனுக்கும் இராக்காயிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு தெரியும். அவர்களுக்குச்சீக்கிரத்திலேயே விவாகம் நடக்கப்போவதும் தெரியும். அவ்விவாகத்தைப் பற்றிய கவலையே கிடையாது ஐயருக்கு. ஆனால் அந்த மூக்கனின் முறுக்குப் பிரச்சாரம்தான் பிடிக்கவில்லை. அல்லும் பகலும் யோசித்தார். இராக்காயிமேல் மூக்கனுக்கு உயிர் என்பதும் தெரியும்.

ஆம், அது நல்லயோசனைதான். அடே யாரங்கே? கூப்பிடு நான்கு பண்ணையாட்களை. ஐயருக்கு யோசனை தோன்றிவிட்டது. பண்ணையாட்களின் காதிற்குள் சிறிதுநேரம் ஏதோ ஓதினார். அவர்களும் அப்பொழுதே வெற்றியைக் கண்டுவிட்டவர்கள்போல் நகைக்கலாயினர். கும்மாள மடித்தனர். அன்று மேலத்தெருக் கள்ளுக்கடையில் நல்ல விற்பனை.

ஆம்,மறுநாள் சேரிவாசிகள் இராக்காயியின் உயிரற்ற சடலத்தை ஆற்றங்கரை நாணல் புதரிலே கண்டனர். ஆலமரத்துப் பேய் அடித்து அங்கே கொண்டுவந்து போட்டுவிட்டதாகப் பேசிக்கொண்டனர். அதில் ஒரு கிழவர் அப்பவே சொன்னேன், இளம் பெண்களை வெளியேற வேண்டாம், என்று கூறவாரம்பித்தார். பாவம் பேதைகள். இப்போது மூக்கன் மேடைமேறிப் பிரசங்கிப்பதில்லை. ஆற்றங்கரை ஓரத்திலே பைத்தியம் பிடித்தவன்போல் நாணல் புதரைச் சுற்றிச் சுற்றி வருகிறான் பைத்தியம்தானென்று சேரி வாசிகள் கூறுகின்றனர்.

அதோ! அங்கே பாருங்கள் சிறிது தூரத்தில். மிராசுதாரும் அடப் பைத்திய ஜனங்களே எனக் கூறி நகைக்கிறார். என்ன அகங்காரமான நகைப்பு.

மந்திரியும் மந்திரியும்

இரண்டு பவுன் அபராதம்!

மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்தார். குற்றம்—மோட்டாரை, அனுமதிக்கப்பட்டதைவிட அதிக வேகமாக ஓட்டியது. குற்றவாளி, ஒரு அமைச்சர்; குற்றவாளியைக்கூண்டில் நிறுத்தியவர், சாதாரண போலீஸ் கான்ஸ்டபிள். குற்றவாளி, மந்திரிதான், செய்த குற்றம், சாமான்யமானதுதான், வேகமாக ஓட்டினதால், விபரீதமான விளைவும் ஏற்பட்டுவிடவில்லை. நண்பருடன் பேசிக்கொண்டிருந்ததால், நான் வேகம் அதிகமானதைக் கவனிக்கவில்லை, என்றுகூட மந்திரி, வாதாடிப்பார்த்தார். அவருடைய வக்கீல், "ஆண்டவன் கூடச் சிலசமயம் ஆளைக்கவனித்து, ஏனோதானோ என்று இருந்துவிடுவதுண்டே" என்று பேசியும் பார்த்தார். ஆனால், மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்தார், இரண்டு பவுன் அபராதம்! என்று.

இதற்குத்தான் ஜனநாயகம் என்று பெயர். நீதியை முறை தவறாமல் நடத்தும் வழி இதுதான். இந்த ஒழுங்கு முறை, எங்கு காணப்படுகிறது?

சம்பவம் சென்றகிழமை பிரிட்டனில் நடைபெற்றது. குற்றம் செய்தவர் என்று கூண்டில் நிறுத்தப்பட்டவர், ஹாரல்டு வில்சன் எனும் பிரிட்டிஷ் மந்திரி. இவரைக்கூண்டில் நிறுத்திவைத்து, அபராத விதிக்கச் செய்தவர் பிரவுன் என்ற கான்ஸ்டபிள்.

சட்டம் அங்கு அவ்வளவு மதிக்கப்படுகிறது— சாமான்யர்களைவிட, பிரமுகர்கள் என்போர் மீதுதான் சட்டம் அங்கு ஜரூராகப்பாயும்.

இங்கோ, என்னையாகோர்ட்டிலே நிறுத்தப் பார்க்கிறாய்? என்று, பிரமுகர்கள் சீறுவர்.

அங்கு, 'நீருமா இப்படிச்செய்வது?'' என்று பிரமுகர்களைச் சட்டம் கேட்கிறது.

இந்த நிலைமையுடன், நமதுநாட்டு நிலையை ஒப்பிடும் போது நமக்கு என்ன எண்ணம் ஏற்படும்!

சின்னாட்களுக்கு முன்பு, காந்தியார் கண்டித்து எழுதினார், மந்திரிகள்—ஆளும் கட்சியினர்— தங்கள் செல்வாக்கை உபயோகித்து, சட்டத்தின் போக்கைத் தடுப்பது மிகப் பெரிய தவறு என்று.

ஏன் கூறினார் அவ்விதம்? அவரே அதனையும் எழுதி இருந்தார். மந்திரிமார்கள் இவ்விதம் நடந்து கொள்வதாக எனக்கு ஏராளமான புகார்கள் வந்துள்ளன என்றார்.

இவர்களும் மந்திரிகள்! அவரும் மந்திரி!!

பணம் குவியும் சிறுதொழில்

—❀—

அலட்சியமாகக் கருதப்படுவதும் — அதிகத் தேவையற்றதுமான சிறு சிறு பொருட்களைத் தயாரிப்பதின் மூலம் லட்சக்கணக்கில் பொருள் திரட்டுவது இன்று உலகில் மிகை படக் காணப்படுகிறது. இதுபோன்ற அவசியமற்ற பொருட்கள் ஒருநாட்டில் செய்யப்பட்டு, வேறொரு நாட்டில் இறக்குமதி செய்வதின் காரணமாக, தன்பொருள்நிலை நொறுங்கிப் போயிருக்கும் நிலையில், அந்நாடு அதிகத் தொல்லைக்குள்ளாவதும், அதன் விளைவாக, அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அற்பப் பொருட்களைத் தடுக்க முனைவதும் வேடிக்கையானது மட்டுமல்ல திகைப்பைத் தரக்கூடியதுமாகும்.

இங்கு சென்னை போன்ற முக்கிய நகரங்களில் விற்கப்படுவதும், கல்வியறிவு உடைய மக்களால் விரும்பி வாங்கப்படுவதுமான ச்யூவிங் கம் (Chewing Gum) மெல்லும் பிசின் வரலாறு விசித்திரமானது. இதனை, உற்பத்திச் செய்வதில் அமெரிக்காவே ஏகபோக உரிமை கொண்டிருக்கிறது. மொத்தத்தில் இருபத்தைந்து வியாபாரிகள் இந்தத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். 2½ கோடி பவுனுக்கு ஒரு ஆண்டில் வியாபாரம் நடக்கிறது.

இந்த மெல்லும் பொருளின் பூர்வ வரலாறு ஆச்சரியமானது. நான்கு நூற்றாண்டுகட்கு முன் ஸ்பெயின் நாட்டு மக்கள் மெக்சிகோ நாட்டின் மீது படையெடுத்தபொழுது, அங்கிருந்த பெண்களின் பற்கள்பால்நிறம் பெற்றிருப்பதைப் பார்த்து பிரமிப்படைந்து, காரணம் கண்டுபிடிக்கும் பணியில் முனைந்தனர். அங்குள்ள ஸ்போடிலா எனும் மரத்தின் பால் போன்ற பிசினை மெல்லுவதினாலேயே, அந்த அணங்குகளின் பற்கள் வெண்ணிற ஒளி வீசுகிறது எனும் உண்மை வெளியாயிற்று. மேலும் மூன்று நூறு ஆண்டுகள் சென்ற பின்னர், இது வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டது. பொய்ப் பற்களுக்கு வெண்மையளிப்பதற்காக, முன் குறித்த மரத்தின் பாலைக் காய்ச்சிப் பக்குவப்படுத்தி மெல்ல ஆரம்பித்தான் ஓர் அறிஞன். திடீரென்று ஒரு யுக்தி தோன்றவே, பாலைக் காய்ச்சிப் பாளம்பாளமாக ஊற்றிச் சிறு சிறு துண்டுகளாக ஆக்கி மிட்டாய் செய்யும் இடங்களுக்கு அனுப்பினான்.

இதுகண்டு பிடிக்கப்பட்ட காலத்திற்கும், இன்று அது அடைந்துள்ள முன்னேற்றத்திற்கும் உள்ள இடைக் காலத்தில் எவ்வளவோ மாறுதல்களை அது பெற்று விட்டது. மணமற்ற நிலையிலேயே அது இருந்தது துவக்கத்தில். இனிப்பும் மணமும் அதற்கு கூட்டப்பட்ட பின்னர், இந்தத் தொழில் இருமடங்கு பெருகிற்று.

இத்தொழிலால் பெரும்பொருள் திரட்டியவர்களில் பில் ரிக்லி என்பவர் முதன்மையானவர் ஆவர். கடாலினா தீவையே விலைக்கு வாங்குமளவு பணம் சம்பாதித்தார். அத்தீவில் மண்ணில் மறைந்து கிடக்கும் கனிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், 30 லட்சம் பவுனுக்கு விலைக்குக் கேட்டும் கொடுக்க மறுத்துவிட்டார்.

இன்று ச்யூவிங் கம் பெரியதோர் தொழிலாகப் போய்விட்டது. அத்தொழிலிற்கான மூலப் பொருட்கள் மட்டும் ஒரு கோடி பவுனுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

அமெரிக்காவிலேயே, இதனை உபயோகிப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. மென்றது போக, துப்பி விழும் எச்சத்தை அப்புறப்படுத்துவதற்கே நியூயார்க் நகர சபையால் ஆயிரக்கணக்கான டாலர் செலவழிக்கப்படுகிறது. தினசரி லட்சக் கணக்கில் மக்கள் வந்து வியாபாரம் செய்யும் மாக்கி எனும் ஷாப்பில் முதலில் இந்த மெல்லும் பொருளை வாங்க மறுத்து விட்டனர். ஆனால் இன்று, அங்கு வருபவர்கள் துப்பும் எச்சம், அப்பண்டசாலையின் தரை, கம்பம், விற்பனை பொருள்கள் மீதெல்லாம் தினம் தினம் நிரம்பிவிடுகிறது.

இவ்வாறு துப்பப்படும் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக,ஒரு ரசாயனம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் உதவியால், நடனசாலை நாற்காலிகள், பஸ்கள், கடைகள், வானொலி நிலையங்கள் முதலிய இடங்களிலிருந்து டன் கணக்கில், இந்த எச்சம் அப்புறப்படுத்தப்படுகிறது.

இதன் விற்பனையைப் பெருக்குவதற்காக ஏராளமாக விளம்பரஞ் செய்யப்படுகிறது. இத்தகைய விளம்பரங்களால் எல்லாம் மயங்காத மக்கள் அரேபியாவில் யேமன் பகுதியிலுள்ளனர். நாம் வெற்றிலைப் போடுவதுபோல், அவர்கள் ஓர் வகைப் பொருளை உபயோகிப்பதால், இதில் அவர்கள் நாட்டஞ் செல்லவில்லை.

இதனை, மெல்லும் பழக்கத்தை ஜப்பானியர்களுக்குப் பிரியமூட்ட நிறைய விளம்பரம் செய்யப்படுகிறது. அவர்கள் வாங்கி உபயோகிப்பதோடு, எச்சத்தைத் துப்பாமல் விழுங்கிவிடுகிறார்கள். எப்படி உபயோகிப்பது எனும் பயிற்சிதான் இனி அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

சென்ற ஆண்டில் இங்கிலாந்தில் 2 லட்சம் பவுனுக்கு இதனை உபயோகப்படுத்தி யுள்ளார்கள். புகையிலை கிடைப்பது அரிதாகவும், விலைக் கூடுதலாகவும் இருக்கும் காலத்தில் மெல்லும் பிசினுக்கு அதிக கிராக்கி உண்டாகிறது.

சில ஆண்டுகளாக ஆங்கில மருத்துவச்சாலைகள் இதனை அதிகமாகக் கையாளுகின்றன. தொண்டையில் அறுவை சிகிச்சைக்குப் பின்னர், உமிழ் நீர் சுரப்பிற்காக இது அதிகமாகத் தரப்படுகிறது. குழந்தைகளுக்கு இது பெருவாரியாகக் கொடுக்கப்படுகிறது.

பென்ஸிலியன் எனும் மருந்தையும், மெல்லும் பிசினின் மணம் கெட்டு விடாத அளவில் சேர்த்துக் கொடுப்பதின் மூலம், குழந்தைகளுக்கு தொண்டையில் சதைவளர்வதைத் தடுக்கக் கூடும் எனச் சில மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள். இத்துறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகிறது. புகைக் குடிக்கக் கூடாதெனும் கட்டுப்பாடு உள்ள இடங்களில் வேலை செய்பவர்களுக்கு, இது ஆறுதல் தரும் பொருளாக இருக்கிறது. மனக் குரங்கைக் கட்டுப் படுத்துவதற்கும், குறித்த ஒரு பொருளின் மீது நிலையாக நாட்டம் செலுத்துவதற்கும், இந்த மெல்லும் பிசின் நன்கு பயன் படுகிறது என டாக்டர்கள் நம்புகிறார்கள்.

விஞ்ஞான விளைவு

விஞ்ஞானமென்பது மக்களுடைய பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவிகளாலும் பாஷையாலும் மக்கள் அடைந்துள்ள அனுபவமென்று கூறலாம். மக்களாகிய நாம், பிரபஞ்சப் பொருள்களாகிய சேதன (உயிருள்ள) அசேதனப் (உயிரற்ற) பொருள்களில் ஒன்று. பிரபஞ்சமென்பது, சேதன, அசேதனப் பொருள்களை உடையது. இந்தப் பிரபஞ்சத்தில் நாம் ஒன்று. இந்தப் பொருள்களைத் தவிர, வேறு எந்தப் பொருள்களாகிலும் உண்டோவெனில், அது நமக்குத் தெரியக் கூடியவை அல்ல. ஏனெனில், நமது புலன்களுக்கும், நாம்பேசும் பேச்சுக்கும் அதீதப்பட்ட ஏதாகிலும் இருந்தால், அவைகளைத் தெரிந்துகொள்ள நமக்கு வழி யாதேனுமில்லை. நாம் அடைந்துள்ள ஞானமெல்லாம், நமது புலன்களுக்குத் தோன்றும் பொருள்களும், அவைகளுக்கு நாம் கொடுக்கும் பெயர்களும் அடங்கிய ஞானமே யொழிய, வேறு எந்த ஞானமுமில்லை. ஆதலின், பிரபஞ்சத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நமது புலன்களால்தான் தெரிந்துகொள்ள முடியும். எனவே, நமக்குத் தெரிந்திருக்கும் பிரபஞ்சத்தைப் பற்றிய ஞானமெல்லாம் நமது புலன்களால் தெரிந்து கொண்டவைகளே. ஒரு வேளை, நமது புலன்களுக்குத் தோன்றாவிடில், சிற்சில கருவிகளைக் கொண்டு தெரிந்து கொள்ளுகின்றோம். எந்த இயந்திரங்களைக் கொண்டு பிரபஞ்சத்தைத் தெரிந்து கொண்டாலும், கடைசியில் புலன்களால்தான் அறியக் கூடும். ஆகையால், நமக்கு இது வரை பிரபஞ்சத்தைப் பற்றித் தெரிந்துகொண்ட விஷயமெல்லாம், புலன்கள் மூலமாகவும், அவ்விதமாகத் தெரியவந்த வஸ்துக்களை அழைக்கு பெயர்களாலும் தெரிந்து கொண்ட ஞானமே. மனத்தால் வந்த ஞானம் என்றாலும், பக்தியால் வந்த ஞானமென்றாலும், அதுஞானமாகா. ஏனெனில், இவ்வித ஞானமென்று கூறுவதெல்லாம் வெறும் சொற்களாக முடிகின்றனவே யொழிய, ஞானத்திற்கு எந்தப் பொருளும் இல்லை. புலன்களுக்குத் தோன்றாத பொருள்கள் இருக்குமாயின், எந்தக் காலத்திலாகிலும் அந்தப் பொருள்கள் உண்மையில் இருந்தால், அவை புலன்களுக்குத் தோன்றவேண்டும். புலன்களுக்குத் தோன்றும் பொருள்களைப் பற்றியும், தோன்றப்போகும் பொருள்களைப் பற்றியும், நாம் அடைந்த ஞானமொன்றேதான் மெய்ஞ்ஞானமென்று அழைக்கப்படும். மதங்கள் கூறும் ஞானம் என்பதும், தத்துவங்கள் கூறும் ஞானமென்பதும் வெறும் சொற்களே ஒழிய வேறல்ல. இவ்வித மத, தத்துவ ஞானங்களால் மக்களுக்கு யாதொரு பயனும் விளைந்ததாகக் கூற இடமில்லை. ஆனால், மெய்ஞ்ஞானத்தால் அடைந்த பிரபஞ்ச ஞானத்தால் மக்களுக்கு விளைந்த நன்மைக்கும், விளையப்போகின்றநன்மைக்கும் கணக்கே இல்லை. அந்த விஞ்ஞானத்தையும் அதன் பலனையும் சுருங்க விளக்குவோம்.

ஆதிமனிதன், மிருகமாய் இருந்த காலையில், நெருப்பின் உபயோகத்தையும், குளிரைப் போக்க ஆட்டு மயிரின் உபயோகத்தையும் தெரிந்துகொண்டவனல்லன். இன்ன உபயோகங்களைத் தெரிந்த பிறகு, மனிதனாக மாறிவர இடமேற்பட்டது. இது மனிதன் அடைந்த ஆதி விஞ்ஞானம். ஆதியில் வில், அம்பு, கத்தி, அரிவாள் முதலிய ஆயுதங்களைக் கண்டுபிடித்து, பகைகளாகிய கொடிய மிருகங்களை வென்று வந்தது ஆதிவிஞ்ஞானத்தால் என அறிதல் வேண்டும்.

உழுது பயிரிடுவதற்குக் கலப்பை முதலிய கருவிகளைக் கண்டுபிடித்தது மூலமாகவே நாகரிகமேற்பட்டது. நாள் முழுமையும், கையால் கிண்டிக்கொண்டு சொற்ப விளைவுகளைக் கொண்டு, எட்டும்எட்டாதஉணவை உண்டாக்கிக்கொண்டிருந்ததிலிருந்து நன்றாக உழுது பயிரிட்டு, போதுமானதற்கு மேல் விளைவித்து வந்தபடியால், ஓய்வும் அவகாசமும் ஏற்பட்டு, வேறுவித வேலைகளைச் செய்யவும், பிரபஞ்சத்தின் இரகசியங்களைத் தெரிந்துகொள்ளவும் வழி பிறந்தது. ஆதிமனிதன் ஆதியில் அடைந்த விஞ்ஞானங்களில், பயிரிட்டு உண்ணும் ஞானம் மிக முக்கியமானதாகும்.

'கட்டை மிதக்கும்; கட்டையை ஒரு பக்கம் சுரண்டி பள்ளமாக்கினால் படகாகும்' என்ற ஆதி ஞானத்தால் படகையும், ஓடங்களையும், கப்பல் தோணிகளையும், புகைக்கப்பல்களையும் உண்டாக்கினர். உலக யாத்திரைக்கு வசதிகள் உண்டாயின. வர்த்தகமும் வளர்ச்சி அடைந்தது.

தண்ணீரை நெருப்பில் காய்ச்சினால், அதுஆவியாகுமென்ற ஞானத்தால் ரயில் வண்டிகள் உண்டாயின. ஆவி இயந்திரங்கள் பலகோடி உண்டாயின. இவைகளால் மக்களுக்கு விளைந்த நன்மைகளைச் சொல்லவும் வேண்டுமா?

செம்பு, ஈயம், பித்தளை, இரும்பு முதலிய உலோகங்களை நெருப்பில் காய்ச்சினால் மெதுவாகுமென்ற ஞானத்தைக்கொண்டு, பலவித பாத்திரங்களையும், இரும்புச்சாமான்களையும் செய்ய மக்களுக்குச் சக்தி வாய்த்தது. இந்தஞானத்தின் பயனை உணராதார் யார் உலகில் உளர்?

பஞ்சை நூற்று, தறியின் மூலமாகவிட்டால் ஆடை உண்டாகும் எனும் ஞானத்தின் உபயோகத்தை யார் உணராதார்?

சற்று ஆராய்ந்து உற்றுப்பார்ப் [illegible] காரணங்களைத் தெரிந்தபிறகு, அதன் காந்த சக்தியைக்கொண்டு இடிவிழுந்தாலும் மக்களுக்குத் தீமை உண்டாகாமல் செய்ய முடிந்தது. இது இந்த விஞ்ஞானத்தால் மக்கள்பெற்றபெரு பாக்கியமாகும். காந்தக் கம்பியால் கோடானு கோடி மாளிகைகள் காப்பாற்றப் படுகின்றன.

சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், தேவதைகள்என்று வணங்கி வந்தோம். ஆனால் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக, அவைகள் நமது பூமியைப்போன்ற உலகங்கள்தான் என்றும், அவைகளிடத்தில் யாதொரு தெய்வீகமும் இல்லை என்றும் அறிந்தோம். முன்னிருந்த மூடநம்பிக்கைகளை விட்டொழித்து வருகின்றோம்.

மழை, வருணபகவானால் உண்டாகும் காட்சி என்றும், காற்று மாருதியால் உண்டாகும் தோற்றம் என்றும் எண்ணி வந்தோம். ஆனால் நீராவியின் குணத்தையும், காற்றின் குணத்தையும், தெரிவிக்கும் விஞ்

ஞானத்தால், மழை பெய்யும் காலத்தையும், புயல்காற்று, சீதோஷ்ண நிலைமைகளையும் தெரிந்துகொண்டு வருகின்றோம். இந்த விஞ்ஞானத்தால், மக்களுக்கு விளைந்துவரும் நன்மையைவேண்டாமென்பார்யார்? இந்த ஞானத்தால் கோடானு கோடி பொருள்கள் நாசமாகாமல் நிலைபெற்று வருகின்றன.

பூமியினுள் நுழைந்து பார்ப்போம். பூகர்ப்ப ஞானத்தால், நமது முன்னோர்களுக்கு பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் இருக்குமிடங்கள் தெரியவந்தன. கரிச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பூகம்பங்களின் மூலாதாரம் தெரிய வந்தது. இன்றைக்குப் பூகர்ப்ப நூலின் ஞானத்தால், உலக நாணய முழுமையும் நடந்துகொண்டு நிலைத்து வருகிறது. உலகச் செல்வமும் அதிகரித்து வருகின்றது.

உயிரைப்பற்றிப் பேசும் ஞானத்தால் ஆடு, மாடு, குதிரை, பன்றி, கோழி முதலிய சீவன்கள் வளர்த்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த ஞானத்தால் உலகில் கறக்கும் பால், நமது முன்னோர்கள் காலத்திலும் கோடிப் பங்கு அதிகமாயிற்று. ஒரு காலத்தில் காட்டு மிருகமாய் இருந்த முரட்டுப் பசுவை, நமது இஷ்டம்போல் பால் கொடுக்கச் செய்தவனுடைய ஞானமொன்றே கோடானு கோடி பிள்ளைகளுக்குப் பால் உதவக் காரணமாய் இருந்தது.

இரசாயன ஞானத்தால் விளைந்து வரும் நன்மையைச் சற்று நோக்குவோம்.

பிரபஞ்ச வஸ்துக்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. இரசாயன குணங்களைப் பற்றிய வஸ்துக்களென்றும், பெளதிக குணங்களைக் குறித்த வஸ்துக்களென்று இருவகைத்து. ஒரே வஸ்துவை, இரசாயன குணத்தைப் பொருத்தபட்டில் விசாரித்து அறியலாம். அல்லது பெளதிக குணத்தைப் பொருந்தியபட்டு விசாரித்து அறியலாம். இதனை ஒரு திருஷ்டாந்திரத்தால் விளக்கிக்காட்டுவோம். சாதாரண ஜலத்தையெடுத்துப் பார்ப்போம். ஜலம் குளிர்ந்திருப்பது, ஜலவடிவைப்பெற்றிருப்பது, அதனுடைய பெளதீக குணம். அதாவதுகுழம்பிய குணங்கள், அதனுடைய பெளதீக குணங்கள். அதனை அதன் அணுக்களாகப் பிரித்தால், நீராவி மயமாகவும் பிராணவாய்வு மயமாகவும் பிரிவது, ரசாயன குணமாகும்.

இவ்விதமாக, ரசாயன ஞானத்தால் பிரிக்கப்பட்ட வஸ்துக்களால், வைத்தியம் மிகவும் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. சுத்தமும் சுகாதார ஞானமும்மக்கள் அடைந்து வருகின்றார்கள். நோய்களுக்குத் தகுந்த சிகிச்சைகளுக்கு ரசாயன ஞானம் இன்றியமையாததாய் இருக்கிறது. மின்சாரவிளக்கு, சண்டைக்கு வேண்டிய மருந்துகள், பாணவேடிக்கைக்கு வேண்டிய பாணங்கள், இவைகள் யாவும், ரசாயன ஞானத்தால், உண்டாகின்றன.

ரசாயன ஞானத்தால் ஒரு கைபுல், பத்து, நூறு, கைப்புல்லாக விளையவும் செய்யலாம். உணவு முதலிய விளை பொருள்கள் யாவும், ரசாயனஞானத்தால பதின்மடங்குவிளையச்செய்து வருகின்றனர். ரசாயன ஞானத்தால போட்டோகிராப்கண்டு பிடிக்கப்பட்டது. நேற்றுத் தோன்றியசினிமாக்களும் உதித்தன ரசாயனஞானததால.

பெளதிக ஞானத்தால், நேர்ந்த உலக நன்மையை அனுதினமும் கண்ணால் பார்த்து வருகிறோம். காற்று இயந்திரங்கள், ஜல இயந்திரங்கள், தானிய மில்கள், கனத்த வஸ்துக்களைத் தூக்கும் லீவர்கள், புல்லிகள், எண்ணிறந்த சக்கரங்கள், கெடியாரங்கள், காற்றுப் பம்புகள், ஜலப் பம்புகள், சாக்கடை, கக்கூஸ் கட்டுதல் முதலிய சுகாதார வசதிகள் யாவும், வஸ்துக்களின்பெளதிக ஞானத்தால் உண்டானவை மோட்டார் கார்களும், ஆகாய ரதங்களும் பெளதிக ஞானத்தால் பெறப் பெற்றவை. இந்த ஞானத்தால்தான் பெரிய காடுகள் தாங்கும் வாராவதிகளும், மகாநதிகளின் அணைகளும், ரயில் ஓடும் பாதைகளும் உண்டாகின்றன. இந்த ஞானத்தால்தான், உலக மகா பட்டணங்களில் பெரும் பெரும் மாடமாளிகைகள், கட்டச் சாத்யமாகின்றது. பஞ்சாலைகளும், சணற்சாலைகளும், இரும்புச்சாலைகளும், தொழிற்சாலை முழுமையும், தற்காலபெளதிக விஞ்ஞானத்தால் உண்டானவை. பிரபஞ்ச முழுதையும் வஸ்துக்களின் ரசாயன பெளதிக குணங்களால், ஆளப்பட்டு வருவதை உணர்ந்த பிறகே நமது மூட நம்பிக்கைகள் நம்மைவிட்டு நீங்கி வருகின்றன.

இதுவரை, மகத்தான வஸ்துக்களால் உண்டாகும் நன்மைகளைக் கவனித்து வந்தோம். இனி அணுப் பொருள்களின் நன்மையை நோக்குவோம்.

அணுமய உயிர்களென்று, சில உயிர்கள் உண்டு. அவைகளைக்குறித்த ஞானத்தால், கொடிய வியாதிகளாகிய பேதி; மகாமாரி, வைசூரி (அம்மை) விஷசுரம், டைபாய்ட், இன்னும் பலவித கொடிய கொடிய வியாதிகளின் காரண கர்த்தாக்களைக் கண்டுபிடித்து, மக்களுக்கு இந்நோய்களிலிருந்து விலக வேண்டி, தகுந்த சிகிச்சைகள்கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன. மக்களைக் கொள்ளை கொள்ளும் வியாதிகள், இந்தச் சிறு கிருமிகளைப்பற்றிய ஞானத்தால் மக்களை அணுகவொட்டாமல் செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரைபிரபஞ்ச வஸ்துக்களின் தனி உபயோகத்தின் மகிமைகளைத் தெரிவித்துவந்தோம். இனி, கடைசியாக, சமூக வாழ்க்கையின் ஞானத்தைச் சுருக்கமாகவிசாரித்தறிவோம்.

சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாதது, நன்னடக்கை, நன்நீதி, நல்லொழுக்கம், நல்வினியோகம் என்பவைகளே. இதுகாறும், இந்நடத்தைகள் யாவும் தேவர்களாலும், முனிவர்களாலும், கடவுள்களாலும் அமைக்கப் பெற்றவை, அவைகளின்படி நடந்தே தீர வேண்டுமென்றுநினைத்து வந்தோம். ஆனல் மெஞ்ஞான விசாரணையால் சமூகநடக்கைகள் யாவும், மக்களின்பழக்கவொழுக்கங்கள் எனவும், அந்தந்தக் காலத்துப் பொருளாதார நிலைமையின்படி, இத்தியாதி நடவடிக்கைகள் மாறி வருகின்றனவென்றும், அவைகளைக் காலதேச வர்த்தமானப்படி மாற்றிக் கொண்டு நடக்க வேண்டியதென்றும், விளக்கப் பெற்றது. திருஷ்டாந்திரமாக, திருடுகிறவன் அவன் தலைவிதியால் திருடுகின்றானெனவும், வறுமையும், செல்வமும் அவனவன் பிராப்தம் என்றும், எந்த முயற்சியும் "அவனன்றி ஓர் அணுவும் அசையாதெனவும்" எண்ணி வந்தோம்.

இந்த எண்ணங்கள் யாவும், தப்பிதமென்றும், சமூக நடவடிக்கைக்கு, அந்தந்த காலத்துப் பொருளாதார நிலைமையே காரணமென்றும் சமூக விஞ்ஞானம் விளக்கிக் காட்டி வருவதைப் பார்க்கிறோம். இதனை காரல் மார்க்ஸ், லெனின், முதலிய பெரியோர்கள் விளங்கக் காட்டியுள்ளார்கள். திருடுகிறவனும்,

(அடுத்த பக்கம் பார்க்க)

கல்வி திட்டம்

வே. ஆனைமுத்து (அண்ணாமலைநகர்)

இன்றைய இன்றியமையாத கோட்பாடுகளுள் கல்வித் திட்டம் பெரிதும் முதன்மையானது. நூற்றுக்குப் பன்னிருவரே படித்துள்ள இவ்விந்தியத் துணைக் கண்டத்தின் கல்வித் திட்டம் அடியோடு மாற்றியமைக்கப்பட வேண்டியதொன்று. கல்வியின் பல துறை முன்னேற்றங்கட்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அரசியலாரின் அயராத சீர்திருத்த வேலைப்பாடுகளும் இன்றியமையாதவை. சுருக்கமாக, இன்றைய 'மக்களை மக்களாக்கும் பணி' அரசியலாரைச் சார்ந்ததென்றே கூறலாம்.

முதலாவதாக, வருங்காலப் பெரியோர்களாகிய இன்றைய இளஞ்சிறாரின் கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படுவதோடு—பெருக்கியும் அமைக்கப்படவேண்டும். நமது மாநிலத்தில் துவக்கக் கல்வி பெற வேண்டியவர்களின் எண்ணிக்கை எழுபது நூறாயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், இன்று துவக்கக்கல்வி பெறுபவர்கள் இருபது நூறாயிரத்திற்கும் குறைந்த எண்ணிக்கையுடையவர்களென்றே அறிகிறோம். கிட்டத்தட்ட நான்கிலொரு பங்குடைய இளைஞர்களே கல்வியளிக்கப்படுகிறார்களென்றால் இதனினும் பிற்போக்கான நிலை பிறிதொன்றிருக்க முடியாது.

சீர்மை குன்றிய இந்நிலை மாறிச் செம்மையான நிலை வர வேண்டுமானால், மாநிலத்தின் ஒவ்வொருபகுதியிலும் ஆங்காங்கு வாழும் மக்களின் 'குடித்தொகைக் கணக்கினை' அடிப்படையாகக் கொண்டு, விரைவில் எண்ணற்ற துவக்கப் பள்ளிகள் தொடங்கப் பெற வேண்டும். இதுவே அரசயலாரின் முதற்பணி! இவ்வாறு அமைக்கப்படும் துவக்கப் பள்ளிகளில் பெரும்பாலும் பெண்டிரே கணக்காயர்களாக அமர்த்தப்படல வேண்டும். இதற்கேற்ப, இன்றுள்ள பெண் கணக்காயர்களின் தொகையான இருபத்தையாயிரம் (கிட்டத்தட்ட), குறைந்தது 'இருபது நூறாயிரம்' ஆக்கப்படல் வேண்டும். தொடக்கக் கல்வியளிக்கும் பணிக்கேற்றவர்கள் 'பெண்டிரே' என்பதுதான் இதன் உண்மை.

இரண்டாவதாகக், கல்வித்திட்டத்தின் படியில் நிற்பது உயர்நிலைக் கல்வியாக அமைக்கப்பட வேண்டும். உயர்நிலைக் கல்வியின் குறிக்கோள், 'பதினாறு ஆண்டு நிரம்பிய ஆணோ, பெண்ணோ மொழியறிவு, தொழிற்பயிற்சியு, உடலுறுதியும் ஒருங்கே நிரம்பியவராய் வெளியேற்றப்பட வேண்டும்' என்பதை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். இத்திட்டம் செயலாற்றப்படுவதனால் அறியாமை அகற்றப்படுவதோடன்றி, அலுவலில்லா அல்லலும், நெஞ்சுரமற்ற கோழைத்தன்மையும் ஒருங்கேஒழிக்கப்படும். அன்றியும், உயர்நிலைக் கல்வி, ஒருவரைச் சிறந்த 'தாய்மொழி அறிவு' உடையவராகவும், 'தான் உலகப் பொதுமகன்' (world citizen) என்பதை உணர்த்தும் வன்மை பெற்றதாயும் அமைதல் வேண்டும்.

உயர்நிலைக்கல்வி பெறத்தக்கவசதி எங்கணும் ஒரே நிரையாய் அமைக்கப்படும் வரை ஆங்காங்கே 'மாணவர் உணவுவிடுதிகளும்' அமைக்கப் பெற்று அரசியலாராலேயே கண்காணிக்கப்படவேண்டும்.

இனி அடுத்து நிற்பது 'கல்லூரிக் கல்வி'யேயாம். 'பட்டம் பெறுவதற்கே கல்லூரிகளுள' என்ற புல்லிய நிலை கல்வியெறியப்படுதல் வேண்டும். பட்டப்படிப்பு வேறு, அலுவல்படிப்பு வேறு என்றநிலை, மாணவர்களை ஏழு அல்லது எட்டாண்டுகள் கட்டுப்படுத்தும் திட்டம் சிதைக்கப்படல் வேண்டும்.

பட்டப்படிப்பு, அலுவல்படிப்பு (Proessional courses) என்பவை ஐந்தாண்டுகட்குள்ளேயே அடக்கப்படல் வேண்டும். இத்தகு திட்டத்தைக் கொண்ட கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் 'விடுதியிணைந்த கலை நிலையங்களாக' (Residencial Institutions) நாடெங்கும் நிறுவப்படல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தினின்றும் வெளியேறும் ஒவ்வொருவரும் 'தாய் மொழிப் புலமை' நிரம்பியவர்களாகப் பயிற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

இத்தகு திட்டத்தின் கீழ், துவக்கக்கல்வி முதல் பல்கலைக்கழகப் படிப்பு முடிய பயிலும் ஒருவன் தாய்நாட்டிற்கும் உலகிற்கும் உறுபயன் நோய்ந்தவனாக விளங்குவானென்பது திண்ணம். ✲

15-ம் பக்கத் தொடர்ச்சி

கொலைபாவியும், மோசக்காரனும், பொருளாதாரக் குறைவால் உண்டாகின்றார்களே யொழிய, அவனவன் தலைவிதியால் அல்லவென்று, சமுக ஞானம் எடுத்துக்காட்டி வருகின்றது. இந்தச்சமுக ஞானத்திற்குச் சமதர்மமென்று பெயர். இதனை யாவரும் உணர்ந்து, உலகில் கள், களவு, சண்டை, போர், மோசம், நாசம் ஒழியவு—சாந்தமும், சமாதானமும், சந்தோஷியும் உலகில் நிலவவும் இந்த ஞானமொன்றே துணையென அறிக. வேறு வழிகள் யாவும் பாழ்வழிகளெனவும் அறிக.

"கானற்கரையில், கதலிவனம் போலுமே ஈனச்சுருதி சொல்லும்."

"கெங்கைக் கரையில் கதலிவனம் போலுமே துங்கச்சுருதிசொல்லும்.'

இந்தத் துங்கச் சுருதியே மெஞ்ஞானமெனப்படும். —

"திராவிட நாடு" காரியாலய இடமாற்றம்.

"திராவிடநாடு" காரியாலயம் கீழ்க்குறிப்பிடும் இடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஏஜண்டுத்தோழர்களும் சந்தாதாரர்களும், பிற அன்பர்களும் இன்றுமுதல் புதியவிலாசத்துக்கே மணிஆர்டர்முதல் எல்லாவிதமான கடிதப் போக்குவரத்துக்களையும் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

புதிய விலாசம்:—

'திராவிடநாடு' காரியாலயம்
95. திருக்கச்சிநம்பி தெரு
காஞ்சிவரம்.

"DRAVIDANADU" OFFICE
95. Tirukkachinambi Street,
Conjeeveram.

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street. Conjeeveram.